விளம்பர விகிதங்களுக்கு :

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரிய தெரு,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்

வருடசந்தா

இலங்கை ரூபா. 5-50

வெளிநாடுகள் ,, 6-50

Telegram "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 13 ஆம் இலக்கம்

## ஆசனக்கோவிலில் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலேயும், சுண்டிக்குளி, சஞ்சுவாம்கோவிலேயும் சேர்ந்த ஆண்பாலாரான கத்தோலிக்கரின் தபசுகால ஞானவொடுக்கம் சித்திரைமாதம்4-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6மணிக்கு ஆரம்பமாகும். வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் ஞானவொடுக்கபோதகம் செய்யவிருக்கின்றார்.

## கள்ளத்தோணிகள் துண்டாடப்பட்டன

தென்னிந்தியாவிலிருந்து கள்ளக்குடியேற்றகாரரை ஏற்றிக்கொண்டு மன்னார்கரையைஅடைந்த இருதோணிகளும், அவற்றில் களவிலேவந்தவர்களும் கைப்பற்றப்பட்டு, மன்னார் உதவிச்சுப்பிறின்ரென்டன் முன்னிலேயில் இருதோணிகளும் கண்டதுண்டமாக வெட்டப்பட்டனவென்றும், ஒவ்வொன்றும் இரண்டாயிரம்ரூபா பெறுமதியுள்ள இருதோணிகளும் விறகுவிலைக்கு விற்கப்படுமென்றும் தெரியவருகிறது. இந்தத்தோணிகளை விற்குமிடத்து அவைகள்மீண்டும் கள்ளத்தோணிகளாக மாறக்கூடுமென்பதிஞல்தான் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

## கட்சிகளும் வெற்றிபெற்ற ஸ்தானங்களும்

சென்றபொதுத்தேர்தலிலே பல்வேறுஅரசியற்கட்சிகளும் போட்டியிட்ட ஸ்தானங்களின்தொகையும், வெற்றிபெற்ற ஸ்தானங்களின்தொகையும் வருமாறு :

| | போ. ஸ். | | வெ. ஸ். |
|---|---|---|---|
| ஐக்கியதேசியக்கட்சி | 127 | — | 50 |
| ஸ்ரீலங்காசுதந்திரக்கட். | 109 | — | 46 |
| தமிழரசுக்கட்சி | 19 | — | 15 |
| மக். ஐக். முன். கட்சி | 89 | — | 10 |
| சமசமாஜகட்சி | 101 | — | 10 |
| பிரஜாதந்திரகட்சி | 101 | — | 4 |
| கம்யூனிஸ்தகட்சி | 53 | — | 3 |
| ஏனையகட்சிகள் | 133 | — | 6 |
| சுயேச்சைகள் | 167 | — | 7 |
| மொத்தம் | 899 | — | 151 |

## கட்டுப்பணம் இழந்தவர்கள் தொகை

சென்றபொதுத்தேர்தலிலே பல்வேறுகட்சிகளிலும் அபேட்சகர்களாகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்து கட்டுப்பணம் இழந்தவர்கள்தொகை வருமாறு :

| | | |
|---|---|---|
| ஐக்கியதேசியக்கட்சி | — | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | — | 21 |
| தமிழரசுக்கட்சி | — | 1 |
| மக். ஐக். முன். கட்சி | — | 52 |
| சமசமாஜகட்சி | — | 52 |
| பிரஜாதந்திரக்கட்சி | — | 87 |
| கம்யூனிஸ்தகட்சி | — | 38 |
| ஏனையகட்சிகள் | — | 108 |
| சுயேச்சைகள் | — | 127 |
| மொத்தம் | | 488 |

## சுயேட்சை அபேட்சகர் ஒருவரே

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணத் தொகுதியில்மட்டுமே சுயேட்சைஅபேட்சகர் வெற்றிபெற்ருர். ஏனையபத்துத்தொகுதிகளின் ஸ்தாபனங்களிலும் தமிழரசால்ஒன்பதும், தமிழ்க்காங்கிரஸால்ஒன்றும் கைப்பற்றப்படலாயின. வெற்றிபெற்றவர்களில் அதிகப்படியானவாக்குகளை ஆகக்கூடுதலாகப்பெற்றவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்களே. அதிகப்படியானவாக்குகளை அதிகம்குறைவாகப் பெற்றவர் யாழ்ப்பாணப்பிரதிநிதி திரு. அல்பிறெட் துரையப்பா அவர்களே. பதினெருபிரதிநிதிகளிலும் அதிகம் கூடியவயதுடையவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்களே. அதிகம் குறைந்த வயதுடையவர்கள் திரு. கே. துரைரத்தினம், திரு. அல்பிறெட் துரையப்பாஎன்பவர்களே. மேலும் திருவாளர்கள் செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, என். நவரத்தினம் என்பவர்களைத்தவிர ஏனையஎழுவரும் பாராளுமன்றத்திற்குப் புதியவர்களே.

## பாராளுமன்ற திறப்புவிழா

புதியபாராளுமன்ற திறப்புவிழா சனப்பிரதிநிதிகள்சபைக் கட்டடத்திலேயே நடைபெறும். சுதந்திரசதுக்கத்திலே நடத்தவிருந்த இத்திறப்புவிழாவைச் சனப்பிரதிநிதிகள்சபைக் கட்டடத்திலேயே நடத்துவதெனத் தற்போதுஅரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

## யாழ்ப்பாண வெங்காய ஏற்றுமதி

தற்போதைய போகத்திலே விளைந்துள்ளவெங்காயம் யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதியாகத் தொடங்கியிருக்கிறது இதுவரை சுமார்ஆறுயிரம் தொண்வெங்காயம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தற்போதைய போகவிளைவிலிருந்து ஏறக்குறைய ஒன்றேகால்இலட்சம் அந்தர்வெங்காயம் ஏற்றுமதிசெய்ய வடபகுதிவிளைபொருட்சங்க சமாஜம் ஒழுங்குசெய்திருக்கிறது.

## யேசுசபைக்குருமாரின் புதியசிரேஷ்டர்

திரிகோணமலை மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றிவருகின்ற யேசுசபைக்குருமாரின் புதியசிரேஷ்டராக அதிவண. இம்மனுவேல் கிறவுதர், எஸ். ஜே. சுவாமியவர்கள் இம்மாதம்19-ந்திகதியன்று நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். யேசுசபையிலே இத்தகைய பெரும்பதவியை வகித்துள்ள முதலாவது இலங்கையர் இவரே. புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிய இவர் கொழும்பிலுள்ள சென் தோமஸ் கல்லூரிப் பழையமாணவர். இலங்கை முழுவதிலுமே பெரியகல்விமானென்றும், குலமகனென்றும், தேவனின் உண்மையானகுரவரென்றும் எல்லோராலுமே அன்புபாராட்டிக் கொண்டாடப்பெறுகிறவர். இவர் 1918-ம்ஆண்டு மாசிமாதம்1-ந்திகதியன்று யேசுசபையில் பிரவேசித்து, இந்தியாவிலே கேர்ஸியோங்கில் 1927-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 21-ந்திகதியன்று குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றவர். சிரேஷ்டரென்றமட்டிலே இவர் தமக்குக்கீழ் 36குருமாரையும், 14 குருத்துவபிறதர்மாரையும், 6பிறதர்மாரையும் தமதுநேர்முகமான அதிகாரத்தின்கீழ் கொண்டிருப்பாரெனஅறிகின்றோம்.

# சுதேச வர்த்தமானம்

## புதியமந்திரிசபை

சுதந்திரஇலங்கையின் ஆருவதுஅரசாங்கத்தின் மந்திரிகள் சென்ற23-ந்திகதி புதன்கிழமைகாலை இராணிமாளிகைசென்று விசுவாசப்பிரமாணஞ்செய்து பதவியேற்றுக்கொண்டதும் முதற்தடவையாகக்கூடியது. எட்டு மந்திரிகளைக்கொண்டபுதியமந்திரிசபை விரைவிலே பன்னிருமந்திரிகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்படுமெனத் தெரியவருகிறது. திரு. டட்லிசேனநாயகா தமதுவாழ்க்கையிலே மூன்றும்முறையாக அமைத்துள்ள மந்திரிசபைஇதுவாகும்.

## சிறுமியின்உடம்பில் 64காயங்கள்

"15வயதான சோபியாஎன்ற வேலைகாரச்சிறுமியை ஏறக்குறையத்தினமும் அவளுடையஎசமான்கள் அடித்துத்துன்புறுத்துவார்கள்; அதனால் அவளின்உடலில் 64காயங்கள் இருந்தன; ஒருமுறை நெருப்பில்காய்ச்சிய இரும்புக்கம்பிஒன்றால் அவளுடைய நாக்கில் சுட்டனர்; காலை4மணிக்கு நித்திரைவிட்டெழுகிற அவள் தனதுவேலைகளை முடித்துக்கொண்டு இரவு10-30மணியளவில்தான் படுக்கைக்குச்செல்வாள்; நிகழும்பங்குனி மாதம்3-ந்திகதியன்று அவள் நுவரெலியாஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள்; நான்குநாட்களின்பின் மரணமானுள்" என்று அவளுடையமரணம்பற்றி சென்ற18-ந்திகதியன்று நுவரெலியாநீதவான் விசாரணைநடத்தியபோது தெரிவிக்கப்படலாயிற்று. இதுசம்பந்தமாய்த் திருமதி ரணசிங்காவை விளக்கமறியலில்வைக்குமாறு உத்தாவிடப்பட்டது. கணவனான மின்சாரபகுதிப் பிரதமகிளாக்குவான திரு. பி. சி. ரீ. ரணசிங்கா [illegible] விடப்பட்டுள்ளார்.

## பேராசிரியரின் புதியபதவி

இலங்கைச் சர்வகலாசாலையிலே கீழைத்தேச கல்வித்துறையின் புதிய தலைவராகப் பேராசிரியர் கே. கணபதிப்பிள்ளை அவர்கள் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். இவர் அச்சர்வகலாசாலையின் தற்காலிக உபவேந்தராகவும் கடமையாற்றியிருக்கின்றார்.

## தாதிகள் பயிற்சிக்கலாசாலை

யாழ்ப்பாணஆஸ்பத்திரித் தாதிகள் பயிற்சிக் கலாசாலைவகுப்புகள் வருகிற சித்திரைமாதம் 1-ந்திகதியன்று ஆரம்பமாகும். பங்குனிமாதம் 29-ந்திகதியன்று மாணவிகளும், போதனசிரியர்களும் கலாசாலைவந்து சேர்வார்கள். இதிலே பயிற்சியளிப்பதற்கென வடக்கு—கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 45மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். கலாசாலைஅதிபர் முதல் சகலரும் இலங்கையரே. இந்தியாவிலிருந்து எவருமே வரவழைக்கப்படவில்லை. இந்தக்கலாசாலையில் போதனமொழிகளாகத் தமிழும், ஆங்கிலமும் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனல்,தமிழ்தான் முக்கியமாக இருக்குமாம்.

## தலதாபன தேர்தல்கள்

பொதுத்தேர்தலைத்தொடர்ந்து இலங்கைமுழுவதிலும் சுமார் 400தலதாபனங்களின் தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன. அரசியல்காரணங்களைமுன்னிட்டும், பொதுத்தேர்தலையிட்டும் இத்தேர்தல்கள் சென்றவருடம் பின்போடப்பட்டிருந்தன. இவற்றிலே நகரசபைத்தேர்தல்களும், பட்டினசபைத்தேர்தல்களும், கிராமச்சங்கதேர்தல்களும் அடக்கியுள்ளன. இவைகள் வருகிற ஆனிமாதத்துக்கும், அடுத்த தை மாதத்துக்குமிடையில் நடைபெறுவதற்கான திட்டமிடப்பட்டுள்ளது.

## அரசாங்க புதியமந்திரிகள்

திரு. டட்லி சேனநாயகாவைப் பிரதமராகக்கொண்டு ஆக்கப்பட்டுள்ள ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கமந்திரிகளின் விபரம்வருமாறு :

1. திரு. டட்லி சேனநாயகா பிரதமர், பாதுகாப்பு — வெளிநாட்டுவிவகார, தேசியத்திட்டமந்திரி.

2. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன— நிதிமந்திரி, வானொலி—தகவல், தலதாபன, வீடமைப்புமந்திரி.

3. திரு. எம். டி. பண்டா— காணி, விவசாய, உணவு, வர்த்தகமந்திரி.

4. திரு. பெர்னுட் அலுவிகாரை— கல்வி, கலாசார. தொழில், கைத்தொழில், கடற்தொழில்மந்திரி.

5. செனற்றர் எட்மண்ட் குறே— நீதிமந்திரி.

6. திரு. மண்டேகு ஜயவிக்கிரமா— தேசியமயசேவைகள், துறைமுக சேவை, போக்குவரத்து, மாரமத்து, மின்சாரமந்திரி.

7. டக்றர்எம். சி. எம். கலீல்—உள்நாட்டு, கிராமாபிவிர்த்திமந்திரி.

8. செனற்றர் டக்றர் எம். வி. பி பீரிஸ்— சுகாதார, சமூகசேவைமந்திரி.

---

கேரளஇராச்சிய அரசாங்கசபையிலே உள்நாட்டுமந்திரி திரு. பி. டி. ஜி. சாக்கோ சென்ற23-ந்திகதியன்று ஒருகேள்விக்குப் பதிலளித்தபோது, முந்தியகம்யூனிஸ்தஅரசாங்கம் பதவியிலிருந்தஇரண்டரைவருட காலத்திற்குள் 1,209கிறிமினல் வழக்குகள் கைவிடப்பட்டனவென்றும, 5கொலைவழக்குகள்உட்பட 1,131 வழக்குகளிலே விதிக்கப்பட்ட தண்டனைகள் நீக்கப்பட்டனவென்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையை நோக்கி ஏழு வாக்கியங்கள்

— சா. பே. —

மன்னுயிரை இரட்சிக்க மனுவுருவெடுத்த எம்பெருமான் யேசுக்கிறீஸ்து மூன்று மணித்தியாலம் சிலுவையில் தொங்கிய போது ஏழு வாக்கியங்களைத் திருவாய் மலர்ந்தருளினர். அத்தருணத்தில் சிலுவையை நோக்கியும் ஏழு வாக்கியங்கள் கூறப்பட்டன. அவற்றை ஆராய்கின்றது இக்கட்டுரை.

1. தேவகுமாரன் மூன்ருணிகளில் தொங்கிக்கொண்டிருக்கிருர். அவ்வழியாற்செல்லும் வழிப்போக்கர்கள் ஏளனத்துடன் கூறுகின்றனர்: இத்தேவாலயத்தை இடித்து மூன்று நாட்களில் எழுப்புவேனென மொழிந்தாயே. முதலில் உன்னைவிடுவித்துக்கொள். நீதேவகுமாரனுனல் சிலுவையிலிருந்துஇறங்கிவா.

சிலுவையிலிருந்து இறங்கிவாஎன்ற வார்த்தைகள் பகுத்தறிவில்லாத உலகத்திலிருந்து யேசுநாதருக்கு விடப்பட்ட சவாலாகும். சிலுவையின்றி—அதாவதுபாடின்றி ஒருசமயம் இயங்கவேண்டுமென விரும்பும் உல்லாசிகளின் வேண்டுகோளாகும். அவர்களின் ஆவலை அவர் நிறைவேற்றியிருப்பின் அன்ஞர் என்ன செய்வார்கள்? நீரே மெய்யானதேவனென விசுவசித்திருப்பார்களா? அங்ஙனமாயின் அதற்குமுன்னர் அவர்செய்த கணக்கற்ற அற்புதங்களை அவர்கள் காணவில்லையா? எமதுஆண்டவர் சிலுவையினின்று இறங்கியிருப்பின் உலகில்சிலுவை இருந்திருக்கும். ஆனல்,அதில் அவரின் திருவுருவம் ஒருபோதும் காணப்பட்டிராது. அன்று கொலைபாதகரின் தண்டனைக்கருவியாக இருந்ததுபோலவே இன்றும்இருந்துவரும். மனிதஇரட்சணியத்தின் சின்னமாக அதுஒருபோதுமே விளங்காது.

நமதுதிவ்வியமீட்பரை வனாந்தரத்தில் பிசாசுசோதித்தபோது அவரது பசியை இலக்காகவைத்துத் தன்சோதனையை அதுநடாத்தியது. நீ தேவனுனல் கல்லைஅப்பமாக்கிச் சாப்பிடு என அதுபகர்ந்தது. அவர் தேவனுயிருப்பின் மனிதனைப்போன்று பசிப்பிரச்சினை அவருக்கிருக்காதேஎன்பதை மறந்துவிட்டான்சாத்தான். இப்போது வழிப்போக்கர்களோ அவரதுவேதனைகளைச் சாக்காகவைத்து மற்ருெரு சோதனையை நடாத்துகின்றனர். நீ தேவனுனல் சிலுவையிலிருந்து இறங்கிவாஎன அவர்கள்மொழிகின்றனர். இங்ஙனம் நமதுஆண்டவரின் தெய்வீகத்தையறிய முற்பட்ட அவ்வழிப்போக்கர்கள் ஏன் மூன்று நாட்கள் பொறுத்திருக்கக்கூடாது. சிலுவையிலிருந்து இறங்கிவருதல்போன்ற புதுமைகளைக் கண்டாலொழிய இந்த மதப்பற்றற்ற மூடர்கள் விசுவசிக்கமாட்டார்களெனில், பாவமன்னிப்புப் போன்ற மாபெரும்புதுமைகளை இவர்கள்நம்புவதெங்ஙனம்?

2. சிலுவையில்தொங்கிய திருச்சுதனின் வலதுபாரிசக்கள்வன் அவரை நோக்கி இரண்டாம்வாக்கியத்தைக் கூறுகிருன்:— ஆண்டவரே நீர் உமது இராச்சியத்துக்கு எழுந்தருளும்போது அடியேனையும் நினைவு கூர்ந்தருளும்.

இது சிலுவையேநோக்கிக் கூறப்பட்ட ஒருதாழ்மையான வேண்டுகோளாகும். வழிப்போக்கர்கள் எமது ஆண்டவரின் தெய்வத்தன்மையை நிரூபிக்க அவர்சிலுவையின் வேதனைகளிலிருந்து தப்பிவருமாறு நிபந்தனை விதித்தனர். ஆயின் நல்லகள்வனே அவரதுதெய்வீகத்தை உணர்ந்தவனுய்த் தனதுபாவஆக்கினையிலிருந்து தன்னைவிடுவிப்பதன்மூலம் உலகத்துக்கு அதை உணர்த்துமாறு கேட்கின்ருன்.

அவன் எவ்விதஅத்தாட்சியையும் கேட்கவில்லை. எந்தநிபந்தனையையும் விதிக்கவில்லை. நீர் தேவகுமாரனுனல் என்பதுபோன்ற வார்த்தைகளை அவன் உபயோகிக்கவில்லை. ஏனெனில், அவர் தேவகுமாரனென அவனது அறிவு அவனுக்குத்தெளிவாக்கியது. ஆகவே, தன்பாவங்களையும் மன்னிக்கக்கூடிய ஒருவரென அவன்நிச்சயித்தான். தன்பாவங்களை மன்னிக்கும் சக்திவாய்ந்தஒருவரே தன்னைப்பரலோகத்துக்கு அழைத்துச்செல்லக் கூடியவர்என்பதை அவன் நன்குஉணர்ந்து கொண்டானென்று அவனதுவார்த்தைகள் புலப்படுத்துகின்றன.

வழிப்போக்கர்கள் அவர் தேவனென்பதை விசுவசிக்கவில்லை. ஆகவே,நீர் தேவனுனல் எனமொழிந்தனர். அவர்களால் விசுவசிக்கமுடியாததை அவன் விசுவசித்தான். அதனுல்ஆண்டவரே என அழைத்தான். கிறிஸ்துநாதருக்கு இராச்சியம்ஒன்று உண்டென்பதையும், அது இவ்வுலகத்துக்குச் சேர்ந்ததல்ல என்பதையும் தன் குற்றங்களுக்காக வருந்திய அந்நல்ல கள்வன் நன்குணர்ந்திருந்தான். ஆகவே மகத்தான ஒருஉண்மையை— அப்போஸ்தலர்கள் கூட இன்னமும்நன்குதெளிந்திராத ஒன்றைச் சிலுவையில் தன்குற்றங்களுக்காகத் தண்டனைஅனுபவித்துக் கொண்டிருந்த அக்கைதிஎடுத்துக் கூறினுன்.

3. தீயகள்வனே ஆண்டவரைத் திட்டி, நீகிறிஸ்துவானுல் உன்னையும் எங்களையும் இரட்சிஎன்ருன்.

தன்குற்றங்களின் கனகனத்தை உணராத தன்னலம்விரும்பும் எவனும் தனக்கு ஓர் இன்னல் வந்துற்றபோது இறைவன் எனக்கேன் இத்துன்பங்களை அனுப்புகிருர்என்று அவரைக் குறைகூற முனைகின்ருன். இன்னல்கள் அதிகரித்தபோது இறைவனையே அவன் நடுத்தீர்க்கத் தெண்டிக்கிருன். இடதுபுறக்கள்வனும் இதற்கு விதிவிலக்கல்லன். ஆம்,தன்குற்றத்தை உணராத இக் கள்வன் காள்மார்க்ஸ் பிறப்பதற்குப் பலவருடங்களுக்கு முன்னரே அவருடையமதம் ஒரு ஏமாற்றுவித்தை; இன்னல்களினின்றும் விடுதலையளிக்கச் சமயத்தால் முடியாதாயின் அதில் சேர்ந்திருத்தல் ஏன்? என்றகொள்கையை உடையவனுகின்ருன்.

எந்த இருமனிதர்கட்கிடையிலும் கருத்தொற்றுமை காண்பதுகடினம். இவ்விருகள்வர்களின் கருத்துகளும் அவ்விதமே. இருவருமே பலகுற்றங்களைச்செய்து மரணதண்டனை பெற்றவர்கள். ஒருவன் தான்மரிக்கும் அத்தருணத்திலும் தன்குற்றங்களை ஓராது, அவற்றிற்குப் பிராயச்சித்தம் நாடாது, யேசுநாதரின் தெய்வீகத்தைப்பரிசோதிப்பதில் தன்வேதனையைக் குறைக்க முயற்சிக்கிருன். வேதனையைக் குறைத்தலொன்றையே எதிர்பார்த்தவனுய்த் தன்சீவியத்தின்பின் நடப்பதைச்சிந்தியாது அவலமாய்ச்சாகின்ருன். மற்றவன் இறக்கும் தருணத்தில் தனதுதகாதநடத்தைகளை உணர்ந்தவனுய்ப் பாவமன்னிப்புப் பெற்று இறைவனின்இராச்சியத்தில் சேர ஆவல்கொண்டு அதற்கான வழிவகுத்தபின் மகிழ்ச்சியோடு மரிக்கின்ருன். இவர்களில் யார் செய்தது சரி?

4. பிரதானஆசாரியர்களும், வேதபாரகர்களும், குருக்களும சிலுவையை நோக்கி, இவன் மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைக் காப்பாற்ற முடியாமற் போனுன்; இவன் இஸ்ருயேலரின் அரசனுனல் இப்போதே சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும்; நாம் அவனை விசுவசிப்போம்; இவன் தன்னைச் சர்வேசுரனின்குமாரன்எனக்கூறினுன்; அங்ஙனமாயின் இறைவனே இவனை இரட்சிக்கட்டும் எனக்கூறினர்.

யேசுக்கிறீஸ்துநாதர் தமதுபோதகங்களின்போது தம்மைப்பற்றிக்குறிப்பிட்டமுக்கியவார்த்தைகளை இவர்கள் எடுத்தாண்டிருப்பது இங்குகுறிப்பிடத்தக்கது. இரட்சகர், தேவகுமாரன், இஸ்ருயேலரின் அரசன் என்ற அவரதுமொழிகளே இன்று அவரைஏளனம்செய்தற்கு உபயோகப்படுத்தப்பட்டன.

மற்றவர்களைக் கிறீஸ்து இரட்சித்தார்என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஜெயிருசின்புதல்வியை; நாயிம்ககர விதவையின் புதல்வனை, லாசறுவை அவர்மரணத்தினின்றும் இரட்சித்ததை அவர்கள்கண்கூடாகக் கண்டனர். ஆயின் இப்போது தம்மைத் தான் இரட்சிக்காதது ஏன் என்பதை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. எந்த ஒருபொருளும் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள முடியாது. உலகமுழுவதுக்கும் ஒளியைத்தந்து தவும்பகலவனுல் தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியுமா? சீவராசிகட்கு வளர்ச்சியை அளிக்கும் மழையும தன்னைத்தானே காப்பாற்றுமா? மற்றவர்களைக் காப்பாற்ற முற்படுகிறவன் தன்னைக் காப்பாற்ற முடியாது. தன்னைத் தியாகம் செய்தே மற்றவர்களை இரட்சிக்கமுடியும. கிறீஸ்துநாதரும் தம்மைக்காக்க முற்படவில்லை. ஏனெனில், தமதுபடைப்புகளை இரட்சிக்கவே அவர் இவ்வுலகுக்கு வந்தார்.

அவர் சிலுவையிலிருந்து இறங்கினுல் தாம்விசுவசிப்பதாக ஏளனம்செய்தோர் உரைத்தனர். அங்ஙனமாயின் மரித்தோரை உயிர்ப்பித்தபோது அவர்கள் விசுவசியாததேன்? அல்லது கல்லறையினின்று யேசுநாதர் உயிர்த்தெழுந்தபோதாவது விசுவசித்தார்களா? இல்லை. அதற்குமாருக உத்தானம்பற்றி உலகுக்குத் திரித்துக்கூற முற்பட்டனர். சிலுவையிலிருந்து இறங்கிவருதலால் தமதுதெய்வீகத்தை யேசுநாதர் நிரூபிக்கவிரும்பவில்லை. அதற்குமாருகச் சிலுவையில் தொங்கியமையே அவரதுதெய்வீகத்தை உலகுக்கு நன்குஎடுத்துக்காட்டியது.

(தொடரும்)

## ஸ்ரீமதி அந்தோனியாப்பிள்ளை நல்லபிள்ளையின்

# தேகவியோகம்

மாதகலிலே பிரபல ஆயுள்வேத வைத்தியராய் விளங்கியிருந்து இற்றைக்கு ஈராண்டுகளின் முன் காலஞ்சென்ற ஸ்ரீமான் சி. மேரியோசேப் அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி அந்தோனியாப்பிள்ளை நல்லபிள்ளை அவர்கள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து நிகழும் பங்குனிமாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமைபிற்பகல் தனது 72-ம் வயதிலே கர்த்தரில் நித்திரையாயினு.

கத்தோலிக்க மாதருலகில் மணிவிளக்குப்போன்று துலங்கியிருந்த இவவின் குணதிசயங்களோ எடுத்துக் கூறும் தரமன்று. சாந்தம், தயை, அடக்கம் முதலாம் சீரிய சுணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று எவருக்குமே ஒரு எடுத்துக்காட்டாயிருந்தவரும், பெருமைவாய்ந்த புராதன குடும்பத்தைச் சேர்ந்தவருமான இச்சீமாட்டி கடந்த 25 வருடங்களுக்கு மேல் மாதகல் அர்ச். அந்தோனியார் கோவில் "மத்ருேனு" வாகக் கடமையாற்றிவந்தா. தினமும் பூசைகண்டு திவ்வியநன்மைபெற்று, சாயந்தரம் நற்கருணைசந்திப்பது இவவின் மாருத வழக்கமாகும். கத்தோலிக்க வாசினையிலே அதிகம் உற்சாகமாக ஈடுபட்டு நமது "பாதுகாவலன்" பத்திரிகையை வாரந்தோறும் தவருமல் வாசிப்பது இவவின் சீவபரியந்த பழக்கமாகவிருந்தது.

தனது அந்திய நாட்களில் தேவனுல தனக்கு அனுப்பப்பட்ட தாங்கமுடியாத வருத்தவேதனையை அவரின் திருச்சித்தத்திற்குப் பணிந்தமனதுடனும், அதிசயிக்கத்தக்க பொறுமையுடனும் சகித்துக் கடைசித் தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப் பெற்றுப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், மற்றும் உற்ருர் புடைசூழ்ந்திருக்கப் பாக்கியமான மரணத்தைத் தானெதிர்பார்த்தபடி தேவமாதா மங்களவார்த்தை கேட்ட மகோற்சவதினமன்றே அடைந்தா.

யாழ்ப்பாண உபபிஸ்காலாயிருந்து சமீபத்திலே இளைப்பாறியிருக்கும் திரு. எஸ். எம். ஜே. லூயிஸ், மாதகல் திருமதி கிறேஸ் சந்திரசேகர, புத்தளம் சுகாதாரப்பகுதி திரு. எம். ஜே. ஈ. பங்கிராஸ், யாழ்ப்பாண இலங்கைவங்கிப் பதில் தலைவர் திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன் என்பவர்கள் இவவின் புதல்வர்கள்.

இவவின் பூதவுடல் மறுநாள் 26-ந் திகதி சனிக்கிழமை மாதகலிலே பன்னூற்றுக் கணக்காகக் குழுமியிருந்த உறவினர் சிநேகிதரின் சமுகத்திலே அழகாகவும், அமைதியுடனும் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்கள் தலைமையில் தேசாசார, வேதாசார முறைப்படி பூமதானம் செய்யப்படலாயிற்று.

இவவை இழந்து துன்புறும் மக்கள், மருமக்கள், உறவினர், சிநேகிதர், மற்ருேருடன் நாமும் அனுதாபப்படுகின்ருேம்.

**R. I. P.**

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## மட்டக்களப்புத்

# தாண்டவன்வெளித் தபால்

கூட்டுச்செபமாலை: சென்றவருடம் வைகாசிமாதமுதல் கார்த்திகை மாதம்வரை பாத்திமா அன்னையின் திருச்சுரூபயாத்திரையை எமதுபங்கில் பயபக்தியாகநடாத்தி இடையருது செபமாலைகள்சொல்லி ஒப்புக்கொடுத்தோம். செபமாலை நம்மைப்பரலோகத்துக்கு இட்டுச்செல்லும் ஏணியென உணர்ந்து, பலகுடும்பங்கள் ஒருதினத்தில் தினமும் பிற்பகல் 6-30மணியளவில் ஒருஇல்லத்தில் ஒன்றுகூடிச் செபமாலைசொல்லும் கூட்டுச்செபமாலைப் பக்திமுயற்சியை எமது கட்டளைக்குரு வர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளும், எமதுபங்கிலுள்ள மரியாயின் சேனை அங்கத்தினரும் ஆரம்பித்துவைத்தனர். நிகழும் பங்குனித்திங்கள் 14-ம்நாள் திங்கள்வாரம் அண்மையிலுள்ள ஏழுகுடும்பங்கள் ஒருஇல்லத்தில்ஒன்றுகூடிச் செபமாலைசெபித்தன. இவ்வாறு எமதுபங்கிலுள்ள கத்தோலிக்க குடும்பங்கள்பல கூட்டாகச்சேர்ந்து வாரத்தின் ஒவ்வோர் தினத்திலும் செபமாலைசொல்லிவரும் பக்திமுயற்சியை மரியாயின்சேனை அங்கத்தினர் ஒழுங்குசெய்துவருகின்றனர். இப்பக்திமுயற்சியால் எமதுபங்கில் ஒவ்வோர் தினமும் ஏதோஒருஇல்லத்தில் கூட்டுச்செபமாலை நடந்துகொண்டிருக்கும். இப்பத்திமுயற்சியில்கலந்துபக்தியுடன் செபமாலைசெபித்து நமக்காகவும, நாட்டுக்காகவும், கத்தோலிக்க சமூகத்துக்காகவும், எமதுபங்கில் தேவஅழைத்தலுக்காகவும் பரலோகஅன்னைக்கு ஒப்புக்கொடுத்து வேண்டுவோமாக!

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஷல் ரிற்றோ திருச்சபையுடன்
# சமாதானத்தை நாடுகின்றாரா?

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவின் சர்வாதிகாரியான மாஷல் ரிற்றோ பரிசுத்த ஸ்தானத்துடன் நட்புறவுகளைத் திரும்பவும்ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அங்கலாய்ப்புடையவராய் இருக்கிறாரென்பதைத் தெரிவிக்கக்கூடிய அறிகுறிகள் இப்போது தெளிவாயிருக்கின்றன. யுத்தகுற்றங்கள்பற்றிய விசாரணையிலே கருதினால் ஸ்ரெபினக்ஆண்டவர் குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்டபின் யூகோசிலேவியாவிற்கும், வத்திக்கானுக்குமிடையே இராசீயஉறவுகள் துண்டிக்கப்படலாயின. அதுமுதல் யூகோசிலேவியா தனதுதேவைகளுக்கு மேற்கத்தியநாடுகளின் உதவி வேண்டியிருந்த காரணமாக அவற்றின் அபிப்பிராயத்திற்கு இசைந்துபோக வேண்டியதாயிற்று.

''சென்றவருடம் நிலவியிருந்தவைகளைக்காட்டிலும் அதிகம் சாதகமாயுள்ள'' யூகோசிலேவிய-வத்திக்கான் இராசீயஉறவுகளில் ''அயற் சார்புகள்சில'' இருக்கின்றன; கருதினால் ஸ்ரெபினக் ஆண்டவருக்கென அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் நிறைவேறிய மகா துக்கப் பாடற்பூசையின்போது பாப்பரசர்நிகழ்த்தியபேச்சின் முழுவிபரத்தையும் அரசாங்கம்எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது'' என்று யூகோசிலேவிய அதிகாரிஒருவர் கூறியதாகச் செய்திகிடைத்திருக்கிறது. ''கம்யூனிஸ்தர்கள் சமயப்பிரசாரத்திற்குமாறான சார்புடையவர்கள்அல்ல; ஆனால், அரசியலையும், திருச்சபையையும் பிரித்துவைக்கவே அவர்கள் முயற்சிக்கின்றார்கள்; சமயமும், சமயவழிபாடும் நீக்கப்படுமென்று நினைப்பது வெறும் பிரேமையாகும்; நாட்டில் ஒவ்வொருவருமே வழிபாட்டுச் சுதந்திரஉரிமையைக் கொண்டிருக்கின்றன'' ரென்று அங்கே குரோத்தியநாட்டின் கம்யூனிஸ்தகட்சித் தலைவரும், மாஷல்ரிற்றோவுடன் நெருங்கிய அரசியல் தொடர்புடையவருமான டக்றர் விலாடிமிர் பகாறிக் கூறியிருக்கின்றார்.

—(ᨆ)—

## ஆபிரிக்காவின்
# புதிய கருதினால்

இற்றைக்குச் சுமார் 40வருடங்களின்முன் ஆபிரிக்க பாலியன் ஒருவன் கடைசியாக ஒருதீர்மானத்துக்கு வந்தான். அவன் தனதுவீட்டைவிட்டு வெளிகொண்டு நெருப்புவெயிலின்கீழ் தங்கனைக்காநாட்டின் தூசிபடிந்த காலடிப் பாதைநீளம் தனது மூன்றரைமணித்தியால நடையைத்தொடக்கினான். ஈற்றில் ஒருகத்தோலிக்கமிஷன்நிலையத்தைப் போய்ச்சேர்ந்து அங்கிருந்த குருவானவரை நோக்கி, ''நான் ஒருகத்தோலிக்கனாக விரும்புகிறேன்'' எனக்கூறினான். 1921-ம்ஆண்டு வைகாசி மாதம் 21-ந்திகதியன்று அவன் ஞானஸ்நானம் அருளப்பெற்றபோது அவனுக்கு ஒன்பதுவயது பூர்த்தியாக இன்னும்இரண்டு மாதங்கள் இருந்தன.

சிறிதுகாலத்தின்பின் அப்பாலியனின் அஞ்ஞானிகளான பெற்றோரும்,அவனின் இருசகோதரர்களும் அவனுடைய நன்முன்மாதிரிகையாலே மனவருட்சிகொண்டவர்களாய் வேதசத்தியங்களைப்படித்துத் திருச்சபையில் சேர்ந்துகொண்டார்கள். காலகதியில் இந்தப்பாலியன் ஒருகுருவாயினான். இற்றைக்கு ஒன்பதுவருடங்களின்முன் ஓர்மேற்றிராணியாராயினான். தற்போது திருச்சபைச்சரித்திரத்திலே காப்பிரியரான முதலாவதுகருதினாலாகத் தெரியப்பட்டிருக்கிறார். அங்ஙனம் தெரியப்பெற்றுள்ள கருதினால்யார்? பிரித்தானிய கிழக்காபிரிக்காவிலே தங்கனைக்காநாட்டிலுள்ள றுட்ராபோ நகரின் லோறியன் றுகாம்ப்வா மேற்றிராணியாரே.

இவர் தம்முடைய பிதாவழியாலும், மாதாவழியாலும் உயர்ந்த வம்மிச வழித்தோன்றலாவர். இவர்தந்தையார் பசிற்றாஎன்ற உயர்சாதியில் உதித்தவர். அது கியான்ஜாவின் அநேகஅரசர்களைப் பிறப்பித்ததாகும். பாயின்காசாதியைச்சேர்ந்த இவருடைய தாயார் நேர்அரசபரம்பரையில் பிறந்தவர். நாட்டின்ஆசாரப்படி புதிய கருதினாலின் பாட்டனாரே அவர்பிறந்தபோது தீர்க்கதரிசனம்போன்று ஒரு நாமத்தைத் தெரிந்து அவருக்குச் சூட்டினார். றுகாம்ப்வா என்பதின்அர்த்தம் ''அதிகம் கீர்த்திபெற்றவர்'' என்பதே.

—(ᨆ)—

## நாஸ்திக போராட்டத்தின்
# தோல்வித்தானம்

சோவியற்ருஷியா அடிப்படுத்தித் தன்னுடன் சேர்த்துக்கொண்ட பால்த்திக்காடுகளில் லிதுவானியாவும் ஒன்று. இது ஒருகத்தோலிக்க நாடாகும். ''லிதுவானியாவிலே நாஸ்திகத்தைநிலைநாட்ட நடைபெற்றுவரும்போராட்டமானது கத்தோலிக்க திருச்சபையிடமிருந்து பலமானஎதிரிடையை எதிர்கொண்டு நிற்கிறது''என்று அந்நாட்டுக் கம்யூனிஸ்தகட்சியின் செயலாளரான திரு. வி. நன்காஎன்பவர் ''சோவியற் கலாசாரம்'' என்ற பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். ''லிதுவானிய கத்தோலிக்கதிருச்சபை இன்றுதானும் வத்திக்கானுடன் அநேகபந்தனங்களைக் கொண்டிருக்கிறது; இக்கால (முற்போக்கு)க் கொள்கைகளை எதிர்த்து — மாக்ஸிய-லெனினிஸியங்களை எதிர்த்து வத்திக்கான் பொதுசனவாழ்க்கையிலே முக்கியமானபங்குவகித்திருப்பது யாவரும அறிந்ததே'' என்றும் அவர்கூறுகின்றார். தேசிய விடுமுறைநாட்கள் மட்டிலே கத்தோலிக்கதிருச்சபை கொண்டுள்ள செல்வாக்குஉட்பட நாட்டின்சரித்திரத்திலே அதற்குள்ள நெருங்கியதொடர்புகாரணமாகக் கத்தோலிக்கதிருச்சபை லிதுவானியமக்களிடையே பலமானபற்றைக் கொண்டிருக்கிறதென்பதைக் கம்யூனிஸ்தரே ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கின்றனர்.

—*—

## பழைய கற்களிலிருந்து
# புதிய ஆலயம்

இங்கிலாந்திலே புராதன ஐலெஸ்போட் யாத்திரைப்பதிக்குச்சமீபமாக மோட்சாரோபண மாதாவின் நவமானதிருசேத்திர ஆலயம்ஒன்று பழைய சமயகட்டடங்களிலிருந்து எடுக்கப்படும் கற்கள்கொண்டு கட்டப்பட்டுவருகிறது. அதேநாமம்கொண்டிருந்து, 8-ம்என்றிமன்னன் 1538-ம் ஆண்டு துறவறஆச்சிரமங்களைக் கலைத்தபோது அழித்துவிடப்பட்ட ஆலயமிருந்த அதேயிடத்திலேயே கார்மேல்சபைக் குருமாரால் இது அமைக்கப்படுகிறது. கார்மேல்சபைப் பாரம்பரியத்தின்படி, அச்சபையின் 13-ம் நூற்றாண்டு அதிசிரேஷ்டராயிருந்த அர்ச். சைமன் ஸ்ரொக் ஐரிலஸ்போட் எனுமிடத்தில் கார்மேல்மாதாவைக்காட்சியிற்கண்டு அவரிடமிருந்து கபிலவர்ண உத்தரியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். புதியஆலயத்திற்கான கற்களில்ஒருபகுதி இடிகரையான ஓர்துறவறஆச்சிரமத்திலிருந்து கிடைக்கிறது. மற்றோர் பகுதி அத்தேசத்திலே புரொட்டஸ்தாந்தசமயம் ஏற்படுமுன் ஓர் கோவிலாயிருந்துமாறிய ஒருநாடுபுறமனையைஇடித்து எடுக்கப்படுகிறது. இந்தஆலயம் சம்பளம் கொடாமலே ''மாதாவின்கட்டடகம்பெனி''என அழைக்கப்படுகின்ற ஒருகத்தோலிக்க குழுவால் கட்டப்படுகிறது.

—(ᨆ)—

## பாப்பரசரும்
# தொழிலாளர்களும்

அன்றுஞாயிற்றுக்கிழமை றோமைநகரிலே தொழிலாளர்கள் வசிக்கும் சென்றோசெல் பகுதியில் அருளப்ப பாப்பரசரை வாழ்த்துமுகமாக இரண்டுலட்சம் பேர்கள்வரைகொண்ட பிரமாண்டமான ஒருமக்கள்குழாம் ஒருங்கேகூடியது. அவர்களைக்கண்டதே பரிசுத்ததந்தை காரின்கூடாரத்தைத் திறந்துவிடும்படியாகச் சாரதியிடம்கூறினார். அதன்மேல் எழுந்துநின்று ''பாப்பரசர்நீடூழி வாழ்க''என்ற அவர்களின் வாழ்த்துமுழக்கங்களைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார். அப்போதுசிலஇளைஞர்கள் தபசு கால ஆராதனைவழிபாடு நிமித்தமாக அவர் சந்தித்துக்கொண்டிருந்த கன்டாலிஸ்எனுமிடத்து அர்ச். பீலிக்ஸின் கோவில்கூரையில் ஏறிக்கொண்டார்கள். பெருந்திரளான மக்கள்குழாத்தினைக் கண்டதே அவ்விடத்துக்கு மேலும்பொலிசர் விரைந்துசென்றனர். கோவிலுக்குவெளியே நடைபெற்ற தபசுகாலசுற்றுப் பிரகாரத்தில் கலந்துகொண்டபின் பாப்பரசர் கோவிலிலே மிகநெருக்கமாகக் குழுமியிருந்த மக்களுக்குச் சிலபேசினார். கோவிலுக்குவெளியேநின்றதிரளான மக்கள் ஒலிபெருக்கிகள் மூலம் அவர்பேசியதைக் கேட்டார்கள்.

## ஜப்பானும்
# குருத்துவ அழைத்தலும்

ஜப்பானிலே மனந்திரும்புதல்களைத் தானும்காட்டிலும் தீவிரவிகிதத்திலே குருத்துவஅழைத்தல்கள் அதிகரித்துக்கொண்டுவருகின்றன. அதனால் குருத்துவ மாணவர்களைச்சேர்த்துப் படிப்பிப்பதற்கென்று மேற்றிராசனங்களுக்குப் பொதுவான குருமடம்ஒன்று வருகிறசித்திரை மாதம் ரோக்கியோநகரிலே திறக்கப்படவிருக்கிறது. இதற்கு ஏற்பட்டுள்ள செலவுபணம் மூன்று லட்சம்பவுண். இது அர்ச். பிரான்சீஸ் சவேரியார்பேரால் அர்ப்பணஞ்செய்யப்படவிருக்கிறது. இதிலே சுமார் 130மாணவர்கள் பயிற்சிபெறுவார்கள். இந்தக் குருமடத்தைக் கட்டுவதற்கு உதவிபுரிந்தவர்கள் ஜேர்மனியில் கொலோன்நகர் அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்தகத்தோலிக்க மக்களே. ரோக்கியோநகர் அதிமேற்றிராசனத்தை அவர்கள் ''சுவீகரி''த் திருக்கிறார்கள். ஜப்பானிலே கத்தோலிக்க சனத்தொகை சென்றமகாயுத்தமுதல் 1 லட்சம்பேரிலிருந்து 2 லட்சத்து 65ஆயிரம்பேராக அதிகரித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**சித்திரை—1960**

ஞா. 3 திருப்பாடுகளின் ஞாயிறு (ஊ)
திங். 4 அர்ச். இசிதோர் (வெ)
செ. 5 அர்ச். வின்சன்ற் பெரர் (வெ)
பு. 6 காலதினம் (ஊ)
வி. 7 காலதினம் (ஊ)
வெ. 8 தேவதாயின் ஏழுவியாகுலங்கள் (வெ)
சனி. 9 காலதினம் (ஊ)

சத்திய வேத
# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
பங்குனிமாதம் 31-ந் திகதி

## அரசாங்கத்தின் நிலை

தேர்தல் முடிந்துவிட்டது. ஆயினும், அரசியல்நிலை ஒருஸ்திரமானநிலைமைக்கு வரவில்லை. மழைவிட்டும் தூவானம்விடவில்லையென்ற நிலையிலேயே அஃது இருந்துவருகிறது. இதற்குக்காரணம், எந்தஒருகட்சிக்கும் பூரணபெரும்பான்மைப்பலத்தைப் பொதுத்தேர்தல் அளிக்கத்தவறியமையே. தனிப்பட்ட முறையிலே பெரும்பான்மைப் பலமுடைய கட்சியாயிருந்தமையால்தான் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயகா அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டராயினும் அவருடைய அரசாங்கம் ஒருஸ்திரமானதன்று. சிறுபான்மைப்பலமுடைய ஓர்அரசாங்கத்தினுல் நாட்டின்நிர்வாகத்தைக் கொண்டுநடத்தும்பொறுப்பு மிகவும்கஷ்டமானது. அரசாங்க கட்சி சென்றதிங்கட்கிழமை கூடியபோது, “சிம்மாசனப்பிரசங்கத்தில் அரசாங்கம் தோல்வியடைந்தால் பிரதமர்பதவியை நான் இராசினாமாச்செய்துவிடுவேன்; உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு கவர்னர்-ஜெனறலிடம் சிபாரிசு செய்வேன்; அதனுல் மறுபொதுத்தேர்தலுக்குத் தயாராயிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்”என்று பிரதமர் டட்லி சேனநாயகா தெரிவித்திருப்பதிலிருந்து இது நன்குபுலப்படுகின்றது.

கடந்தமூன்றரைவருடகாலமாக இந்நாட்டுமக்கள் நிம்மதியற்ற வாழ்க்கையிலே நினைக்கத்தானும் முடியாத பெரும்மனக்கசப்பு அடைந்திருக்கிருர்கள். இந்நாட்டினைப்பாழாக்கிவந்த — அதன் நல்லபெயரைப் பழுதாக்கிவந்த பலவிதகேடுபாடுகள், இன-மத வேறுபாடுகளெல்லாம் இந்தப் பொதுத்தேர்தலுடன் அன்றழிந்துபோகும்; ஒருஸ்திரமானஅரசாங்கம் ஏற்படுவதோடு சீரழிந்துபோயிருக்கும் சமூக,பொருளாதார நிலைமைகள் ஒருசீருக்கு வருமென்றெல்லாம் அவர்கள் மனக்கோட்டை கட்டியிருந்தார்கள். ஆனுல்,அவர்கள் நினைத்தது ஒன்று, நிகழ்ந்திருப்பது மற்ருென்று. புதியபாராளுமன்றம் கூடும்போது நியமனஅங்கத்தவர்கள்உட்படக் குறைந்தபட்சம் 79 அங்கத்தவர்களின்ஆதரவு புதிய அரசாங்கத்துக்கு ஆவசியகம் இருக்கவேண்டும். இப்போது 57அங்கத்தவர்களின் ஆதரவே அதற்குஇருக்கின்றது. அன்று புதியசபாநாயகர், உபசபாநாயகர் தேர்தலிலே எதிர்க்கட்சிஅங்கத்தவர்களில் 22பேரின் ஆதரவு அதற்குக்கிடைக்குமா? கிடைக்காவிடின் எதிர்க்கட்சியினர் தெரிவு செய்யும் அங்கத்தவர்களே இருபதவிகளையும் வகிக்கவேண்டிய நிலைமைஏற்படுமன்ரே! அத்துடன் வருகிறசித்திரைமாதம் 6-ந்திகதியன்று பாராளுமன்றத் திறப்புவிழா நடந்தேறும். அதிலேசிம்மாசனப்பிரசங்கம் நடைபெறும். அப்பிரசங்கத்தில் அரசாங்கம்வெற்றிகாணுமா? காணுவிடில் என்னநடக்கும்?

ஸ்திரமான ஒருஅரசாங்கத்தை அமைப்பதும், பெரும்பான்மைச் சமூகத்தினரான சிங்களவருக்கும், சிறுபான்மைச்சமூகத்தினரான தமிழருக்குமிடையே பரஸ்பரம்நம்பிக்கையை நிலைநாட்டுவதுமே திரு. டட்லியை இன்று எதிர்நோக்கியுள்ள பிரதானஇரு பிரச்சினைகளாகும். அவரும் சாதிசமய வேற்றுமைகளின்றி இந்நாட்டுமக்கள் அனைவரையும் ஒரேசமுதாயமாகத் திரட்டினுலொழிய இந்நாடுமுன்னேற முடியாதாகையால் அங்ஙனம் ஒரே சமுதாயமாகத் திரட்டுவதே தமது முக்கிய இலட்சியமாக இருக்குமெனத் தெரிவித்திருக்கின்ருர். நீதி,நேர்மை, திறமை ஆதியவற்றைக்கொண்ட ஸ்திரமான ஒருஜனநாயகஅரசாங்கமே நாட்டின் இன்றையபிரதான தேவைகளில்ஒன்று. ஏனெனில், அரசியல்ஸ்திரமே பொருளாதாரஸ்திதிக்கு முன்னேடியாயிருக்கிறது. அதனுல் திரு. டட்லிமுன்பாகவுள்ள முக்கிய அலுவல் அத்தகையஸ்திரமான ஒருஜனநாயக அரசாங்கத்தை உருவாக்குவதே. அவர் இதில்வெற்றிகாண்பாராயின் மற்றெல்லாம் வலியவந்து கைகூடுமென்பதில் ஐயமில்லை.

---

## குருத்துவ தங்கயூபிலிவிழா

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் நிகழும் பங்குனிமாதம் 22-ந்திகதிசெவ்வாய்க்கிழமைகாலை பெருந்திருநாளிற்போன்று மங்கலகரமாகப் பெருமிதகாட்சி அளித்துநின்றது. பலிபீடஸ்தானத்தில் மகாவந். மேற்றிராணியாண்டவரும், இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரின் சிரேஷ்டரான அதிவண. அலெக்ஸ் செறுசுவாமிகளும், மற்றும் அநேககுருப்பிரசாதிகளும் அமர்ந்திருக்க, ஆலயத்திலே பிறதர்மாரும், கன்னியாஸ்திரிமாரும், கல்லூரிமாணவர்களும், பாடசாலைப்பிள்ளைகளும், மற்றும்விசுவாசிகளுமாகப் பெருந்திரளானேர் தேங்கியிருக்க, வண. ஜே. எவ். சேவியர், வண. வி. உக்தின்எனும்வயோதிப குருப்பிரசாதிகள் இருவரும் தங்கள்குருத்துவ ஐம்பதாம் வருட செம்பொன்யூபிலிவிழாவைக் கொண்டாடுமுகமாக மணிகள்ஆர்ப்பரிக்க இருமுனிவர்கள்கோலமாய் ஆங்குஎழுந்தருளியகாட்சியோ பெரிதும் பக்திப்பரவசம் உண்டுபண்ணும் பரமானந்த காட்சியாயிருந்தது.

யூபிலிநாயகர்கள் இருவரும் பலிபீடஸ்தானத்தைஅடைந்ததும் அவர்களில்ஒருவரான வண. வி. உக்தின்சுவாமியவர்கள் ஆசாரிய திருவஸ்திரங்கள் அணிந்து, வண. ஏ சியேர்ப்கா, வண. எல். அந்தோனிப்பிள்ளைஎனும் குரவர்கள்இருவரும் துணைபுரியத் தோத்திரபாடற்பூசை நிறைவேற்றினர். சுவிசேஷத்தின்பின் அதிவண. அலெக்ஸ் செறுசுவாமியவர்கள் பலிபீடத்தின்முன்னின்று, யூபிலிநாயகர்கள்மேல் கடந்தஐம்பதுவருடங்களாகப் பொழியப்பெற்ற திருவருட்பிரசாதங்களுக்கும், அவர்கள்மூலமாக யாழ்ப்பாணத்திருச்சபை அடைந்துகொண்ட சகலநன்மைகளுக்குமாக நாமெல்லாம் அவர்களோடுசேர்ந்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்ததோத்திரம் செலுத்தும்படியாக இங்கேகூடியிருக்கிருேமென்று தமதுஅர்த்தபுஷ்டியான அமிர்தபிரசங்கத்தை ஆரம்பித்தார். அவர்கள் தமதுதிருத்தொண்டுகளைப்பிரமாணிக்கமாக நடாத்திவந்து ஏனையகுருப்பிரசாதிகளுக்கு ஓர்எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிருர்கள்; அவர்களால் எத்தனையோபேர் மனந்திரும்பி நம்திருமறையைத் தழுவியிருக்கின்ருர்கள்; எத்தனையோ ஆயிரக்கணக்கானமக்கள் திருச்சபையின் ஞானநன்மைகளை அடைந்திருக்கிருர்களெனக்கூறி அவர்களின் திருஊழியத்தைப் பாராட்டினுர். அதன்மேல் அங்கு சமுகமாயிருந்த பெற்ருரை விழித்து, உங்கள்குடும்பங்களிலிருந்து குருமடத்திற்குப் பிள்ளைகளை அனுப்பிவைத்து, அவர்கள்ஓர்காலம் மறுகிறீஸ்துவாக விளங்குவார்களேயானுல், அஃது எத்துணைபெரும் பாக்கியமாயிருக்கும்; உங்கள்பிள்ளைகளுக்குத் தேவஅழைத்தல் உண்டென்றுகண்டால் ஒருவிததடையும் நீங்கள்செய்யப்படாது! குருத்துவஅந்தஸ்துக்கேற்ற குணஇலட்சணங்களைக்கொண்ட பிள்ளைகளைக் குருமடத்திற்கு அனுப்பவேண்டும்; நீங்கள்இதற்காக உங்கள்பிள்ளைகளுக்கு நன்முன்மாதிரிகைகாண்பித்துத் தேவபக்தியும், நல்லொழுக்கமுமுடையவர்களாக ஒழுகிவர வேண்டுமெனக்கூறித் தமது பிரசங்கத்தைமுடித்தார்.

திவ்வியபூசையின்போது பெருந்திரளானேர் திவ்விய நன்மைபெற்று யூபிலிநாயகர்களின் கருத்துகளுக்காக மன்ருடிக்கொண்டார்கள். பூசைமுடிவில் சிரேஷ்டசுவாமியவர்களால் “தெதேயும்”எனும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. அதன்மேல் யூபிலிநாயகர்கள்இருவரும் மேற்றிராசன மாளிகைசெல்லவே அவர்களின் ஞானமக்கள்பலரும் அவர்களைச் சந்தித்து அவர்களின்ஆசிபெற்றுத் திரும்பியவண்ணமிருந்தார்கள்.

**யூபிலிநாயகர்கள் நீடூழிவாழ்க!**

---

● போர்மோஸா தீவைத் தனது தலைமைஸ்தானமாகக் கொண்டுள்ள சுதந்திர தேசியசீனுவின் ஜனுதிபதியாக 73வயதுநிரம்பியஜெனறல்ஷியாங்-கை-ஷெக் மூன்ருவதுதடவையாய் ஜனுதிபதியாகச் சென்ற21-ந்திகதி தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்ருர். 34வருடம் தேசீயசீனத் தலைவராயிருந்துவந்தஇவர் நீடித்துப்பதவியிலிருக்க இப்போது சந்தர்ப்பம்கிடைத்துள்ளது.

## அதிபர் சுபதினம்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சக அதிபர் வண. யோசெவ் வேதநாயகம் சுவாமியவர்களின் சுபதினமானது அச்சகத்தொழிலாளரால் சென்ற 23-3-60 புதன்கிழமையன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்படலாயிற்று.

அன்றுகாலை 6-30 மணிக்குச் சஞ்சூசையப்பர் சிற்ருலயத்திலே அதிபர் சுவாமியவர்கள் திவ்வியபூசை நிறைவேற்றினர். பூசைவேளை சுவாமியவர்கள் தேமாரிபொழிந்தவாருய்ச் சூசைமாதவனின் பெருமையை எடுத்துக்காட்டி அரியதோர் பிரசங்கஞ்செய்தார். பின்னர் அச்சகத்தைச் சேர்ந்தவர்களால் சஞ்சூசையப்பர் கூட்டச்சாலையிலே சுவாமியவர்களுக்கு ஓர் பரிமளிப்பான உபசாரம் நடத்தப்பட்டது. போர்மன் ஜே. நிக்கலஸ் அவர்கள் மாலையிட்டு அவரை வரவேற்றனர். திரு. எம். வேதராசா அதிபர் சுவாமிகளின் குணவிஷேஙகளைப் பாராட்டித் திருநாட் சுபசோபனம் கூறிநின்ருர். அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதன்மேல் சிறப்பான சிற்றுண்டி உபசாரணையுடனும், அதிபரின் நன்மதியுடனும் விழா இனிதே நிறைவாயிற்று.

---

## மகா ஞானவொடுக்கம்

கருக்குப்பனை, கோட்டைப்பிட்டிக் கிறிஸ்தவர்களுக்குச் சென்ற 6-3-60 தொடக்கம் 20-3-60முடிய வனவாசியான அர்ச். அந்தோனியார்ஆலயத்தில் பங்குக்குரவர் வண. யோசெவ்வாஸ் சுவாமியவர்கள்தலைமையில் ஓர் மகாஞானவொடுக்கம் போதிக்கப்பட்டது. அதனை அதிவண. சற். என். குரூஸ் சுவாமியவர்களும், வண. எவ். ஜே. நவரத்தினம் சுவாமியவர்களும் அதிகம் விமரிசையாக நடத்தினுர்கள். இருவாரகாலமும் அவர்களால் பொழியப்பட்ட உபதேசங்களால் எத்தனையோ மக்களின் இருதயங்களிலே நவசீவியத்துக்கு அடிகோலப்பட்டது. “கரைப்பவர்கரைத்தால் கல்லும்கரையும்அன்ரே!” இருகுரவர்களும் கன்னெஞ்சுகளையும் கரைந்துருகச்செய்து நல்வழிப்படுத்தினர். மகாஞானஒடுக்க காலமுழுவதிலும் ஞானவளம்பொழியும் மருதமடுத்திருப்பதிமயமாகவே கருக்குப்பனைக்கிராமம் காட்சியளித்தது. ஞானவொடுக்க காலத்திலே மரித்தவிசுவாசிகள் ஞாபகதினம், விசேஷ தவத்தின்தினம், பிள்ளைகள் தினம், தொழிலாளர்தினம், நோயாளர்தினம், நிந்தைப்பரிகாரதினம், பெற்ருேர்தினம், தேவஅன்னையின் புனிததினம்ஆதியன பயபக்தியாகவும்,எவர்க்கும் பரவசமுண்டுபண்ணும் விதமாகவும் அனுசரிக்கப்படலாயின. முடிவுதினமாகிய 20-ந்திகதியன்று ஞானப்பூச்செண்டுகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. ஞானஸ்நான வார்த்தைப்பாடுகள் புதுப்பிக்கப்பட்டுப் பாப்பரசரின் அப்போஸ்தலிக்கஆசீர்வாதம் அதிவண. குரூஸ் சுவாமியவர்களால் அளிக்கப்பட்டு ஞானவொடுக்கம் முடிவுற்றது. இதன் ஞாபகார்த்தமாகப் பெரியவெள்ளிக்கிழமையன்று மூவைந்துஅடிநீளமான ஒருபாரியசிலுவை கோட்டைப்பிட்டி ஆலயவளவில் நாட்டப்படும்.

21-ந்திகதி கிராமமக்கள் ஒருங்கே கூடி மகாஞானவொடுக்கத்தை இனிதே நடத்திய வண. பங்குக்குரவர், அதிவண. சற். என். குரூஸ்குரவர், வண. நவரத்தினம்குரவர் ஆகியமூவருக்கும் தமது நன்றித்துதியை ஆசிரியர் ஜே. சி. குரூஸ்மூலம் தெரிவித்து, இருகுரவர்களினதும் ஆசியைப்பெற்றுக் கொண்டார்கள்.

ஜே. சி. குரூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரப் பகுதி

# இலங்கைக் கயரோக நிவாரண தேசீய சங்கம்

மனிதனின் முதலாம் எதிரியான கயரோகத்தை ஒழிப்பதற்கு இலங்கைக் கயரோகநிவாரண தேசீய சங்கம் செய்துவரும் முயற்சிகள் அதிகம். காரணம், கயரோகத்தினால் பீடிக்கப்பட்ட நமது சகோதரர்களிற் பலர் படுந் துயரங்களே. தினமும் யாழ்ப்பாணத்தில் மூன்று சகோதரர் வீதம் இந்நோய்காரணமாக இறக்கின்றனர். நூற்றுக்கணக்கான பாலர்களையும், ஆயிரக்கணக்கான மக்களையும் பீடித்துள்ள இந்நோயை அறவே ஒழிப்பதே எங்கள் சங்கத்தின் நோக்கம். முக்கியமாக மக்களுக்கு இந்நோயைப்பற்றியும், அதன் தீமைகளைப்பற்றியும் எடுத்துக்கூறுவதோடு, இந்நோயால் அல்லலுறும் மக்களுக்கு உதவியளிக்கவும் வேண்டும். கயரோகம் காட்டுத்தீபோலப் பரவும் இத்தருணத்தில் இதனைப்பரவாது தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வது நம்மவர் கடமையாகும்.

இன்று கயரோகம் இலங்கையில் மட்டுமல்ல, உலகிலேயே பெரிய பிரச்சனையாகும் உலகசுகாதார சம்மேளனம் (W. H. O.) கயரோகத்தடைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. கயரோகம் பரம்பரை வியாதியல்ல, தொற்றுவியாதி. ரியூபக்கிள்பகில்லஸ் (Tubwcle Basillus) என்ற கயரோகக்கிருமி தொற்றிக் கொள்வதால் உண்டாகின்றது. ஒரு நோயாளியின் எச்சிலில் இக்கிருமிகள் இலட்சக்கணக்காக இருக்கும். அவர் இருமும்பொழுதும், எச்சில் துப்பும் பொழுதும் இவைகள் காற்றில் ஆயிரக்கணக்காகப் பறக்கின்றன. இவைகள் நமதுகண்களுக்குத் தெரியா. காற்றோடு பறக்கும் கிருமிகள் நாம் சுவாசிக்கும்போது சுவாசப்பையை அடைகின்றன. எமதுஉடல் பலவீனமடையும் பொழுது அவைகள் சுவாசப்பையைத் தாக்கி நோயை உண்டுபண்ணுகின்றன.

கயரோகம் இன்றுநேற்றல்ல, பல நூற்றாண்டுகளாக இருந்துவரும்நோய். என்றாலும் 17-ம் நூற்றாண்டிற்கும் 19-ம் நூற்றாண்டிற்கும் இடையிற்றான் கயரோகம் கண்டுபிடிக்கப்பட்டது. ரொபேட் கொச் (Robert Koch) என்ற நிபுணர் 1882-ம் ஆண்டு கயரோகக் கிருமியைக் கண்டுபிடித்தார். அதன்பின்னர்தான் இந்நோயைப்பற்றிய ஆராய்ச்சியும், சிகிச்சையும் உண்மையில் ஆரம்பமாயின. சில ஆண்டுகளுக்குமுன்பு ஒருவருக்குக் கயரோகம் பீடித்துக்கொண்டால், அவர் பாயுடன் ஒட்டி எலும்பும் தோலுமாகக் கஷ்டப்பட்டு, இறுதியில் இறந்துவிட வேண்டியதுதான். ஆனால் இன்றோ அதிர்ஷ்டவசமாகக் கயரோகத் தடைக்கேற்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மருந்துகளை வைத்தியர் கூறும் முறைப்படி உபயோகித்துச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டு, சுத்தமான காற்றுவசதியுள்ள இடத்தில் போதிய ஆறுதல் எடுத்து வாழ்வாராகில், இந்தநோயினின்றும் சீக்கிரம் குணமடையலாம்.

இந்தக்கொடிய வியாதி எங்களைப் பீடிக்காது இருப்பதற்கு நாம் கையாளக்கூடிய முறைகளைச் சிறிது கவனிப்போம். எங்கள் தேகாரோக்கியம் குன்றுது சிறு நோய்க்குணங்கள் உடலில் ஏற்பட்டால் அதற்கான வைத்தியரிடம் உடனடியாகச் சென்று சிகிச்சை பெறுதல் வேண்டும். இன்னும் சத்துள்ளஉணவு உட்கொள்ளுதல், சுத்தமான காற்றுவசதியுள்ள இடத்தில் வாழுதல், போதிய தேகாப்பியாசம் செய்தல், போதியளவு ஆறுதல் பெறுதல், உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தியில்லாததால் பீ. சீ. ஜீ. (B. C. G.) தடைமருந்து ஏற்றுவித்துக் கொள்ளுதல் முதலியன இக்கொடிய நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றும். இந்நோய் ஒருவருக்கு எவ்வாறு ஆரம்பமாகிறதென்பதைக் கவனிப்போம. பொதுவாக ஒருவருக்கு இரவில் காய்ச்சல், வியர்வை, உடற்பலவீனம், களைப்பு, உடல்பாரக்குறைவு, நெஞ்சுநோ, துப்பலில் இரத்தக் கலப்பு, உணவு அசீரணம் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவர் கட்டாயம் ஊடுருவிக்கதிர் மூலம்(X. Ray) படம்பிடித்துத் தமது நெஞ்சைப் பரிசோதிக்கவேண்டும்.

இப்பரிசோதனை நெஞ்சுப்பரிசோதனை நிலையத்தில் நடைபெறுகிறது. அரசாங்கம் நெஞ்சுப்பரிசோதனை நிலையங்கள், கச ஆஸ்பத்திரிகள் முதலியன ஸ்தாபித்து, இந்நோயாளருக்குச் சிகிச்சைஅளிக்கிறது. அத்தோடு நோயாளருக்கும், குடும்பத்தினருக்கும் பணஉதவி அளிக்கிறது இப்பணஉதவியைத் தவறான வழிகளில் செலவிடாது நோயாளருக்கு வேண்டிய உணவுப்பொருட்களை வாங்குவதில் செலவிடுதல் வேண்டும். தலகொகொல்லை என்றஇடத்தில் நோய்மாறியவர்கள் தமதுவாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை உழைத்துப் பெறுவதற்காக வேண்டி, ஒரு வைத்திய சாலை அமைத்து அங்கே அவரவர்களுக்கு விரும்பிய தொழில்கள் கற்றுக்கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட வைத்திய சாலைகள் நாடுமுழுவதும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஸ்தாபிக்கப்படவேண்டும். ஏனெனில், நோய் மாறியபின்பு ஒருவர் உழைப்பில்லாதுவிட்டால் பணக்கஷ்டத்தாலும், மனவருத்தத்தாலும். திரும்பவும்நோய்க்கு அடிமையாவார்.

இக்கொடியநோயை ஒழித்துக்கட்டுவதே எங்கள்சங்கத்தின் நோக்கமாகும். இதற்கு உங்கள் யாவருடையவும் ஒத்துழைப்புத்தேவை. அரசாங்கத்தினால் தனியேநின்று இந்தநோயைத் தடைசெய்யமுடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை. எனவே, நீங்கள் எல்லோரும் இச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேருங்கள். நாங்கள் எல்லோரும் தோளோடு தோள் நின்று இக்கொடிய கயரோகத்தை ஒழித்து வெற்றியடைவோம்.

(இலங்கை வானொலியில் 27-2-60இல் பேசப்பட்டது)

---

## பாராளுமன்ற திறப்புவிழா

புதியபாராளுமன்றத்தைச் சம்பிரதாயப்படி திறக்கும்வைபவம் நடைபெறவேண்டியதினம் இம்மாதம 30-ந் திகதியிலிருந்து அடுத்தசித்திரைமாதம் 6-ந்திகதிக்குப் பின்போடப்பட்டிருக்கிறது. ஆனால்,இம்மாதம்30-ந் திகதியன்று சபாநாயகர் தெரிவுசெய்யப்படுவர். சித்திரை மாதம் 6-ந்திகதியன்று திறப்புவிழாவிற்குரிய சிம்மாசனப்பிரசங்கத்தைத் தயாரிக்கக் காலநேரம் வேண்டியிருந்தமையாலேயே விழாவைப் பின்போடுவதென மந்திரிகளின் முதற்கூட்டத்தில் தீர்மானிக்கப்படலாயிற்று.

---

● குடிக்கும்நீரில்போலவே கடல் நீரிலும் தங்கம் காணப்படுகிறதென்று சோவியற்விஞ்ஞானியான டொவென் கோல்கூறுகின்றார். "கடல்நீரிலே ஒரு கனமீற்றரில் சராசரி 5மில்லிகிறாம் நிறைக்குத் தங்கம்இருக்கிறது; இவ்வாறு கடல்நீரிலிருந்து ஏற்கனவே தங்கம் எடுக்கப்பட்டுள்ளதென்று கூறுகிறார் இந்தச் சோவியத்விஞ்ஞானி.

# சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

## 7. ஸ்நாபகரின் பிறப்பு — லூ. I. 57-80

**1.** விருத்தசேதனம் (59) — இது புதிய ஏற்பாட்டில் அனுசரிக்கப்படவேண்டியதில்லை (நட xv. 5, 28). பழைய ஏற்பாட்டிலும் இது சருவேசுரன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கைக்கு அடையாளமொழிய, பிரசாதத்தின் கருவியல்ல (ஆதி. xvii. 11). ஆபிரகாம் விருத்தசேதனத்தைப் பெறமுதல் தமது விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்டார். ஆகையால், அவர் புதிய ஏற்பாட்டிலேயும் விசுவாசிகளுடைய பிதாவாக இருக்கின்றார் (உரோ. iv. 9–16).

**2.** சயிக்கினை காட்டி (62) — ஆகையால், சக்கரியாஸ் ஊமையாக மாத்திரமல்ல செவிடாகவும் இருந்தார்.

**3.** பேர் அருளப்பர் (63) — எலிசபேத் கபிரியேல் தெரிவித்த பேரைப்பற்றிச் சக்கரியாசிடமிருந்து கேள்விப்படாமல் அதே பேரைத் தேவ செயலால் அறிந்திருக்கவேண்டும். ஆகையாற்றான் சுற்றத்தார் சக்கரியாசின் விருப்பத்தை வினவினார்கள். இருவரும் ஒரேபேரை விரும்பினவுடன் அதிசயப்பட்டார்கள்.

**4.** ஆண்டவருடைய கரம் (66) — என்பதற்கு அர்த்தம் ஆண்டவருடைய பாதுகாப்பு அல்லது தேவாதீனம்.

**5.** இரட்சணியக் கொம்பு (69) — என்பதற்கு அர்த்தம் வல்லமையுள்ள இரட்சகர். இச்சங்கீதம் ஸ்நாபகருக்குப் பேர் சூட்டப்பட்டபொழுது இயற்றப்பட்டதாயினும் அதன் பெரும்பகுதியில் மெசியாவைப்பற்றியே கூறப்படுகின்றது.

**6.** உதயமானவர் (78) — அதாவது, கிழ்த்திசையோர். இது பழைய ஏற்பாட்டில் மெசியாவுக்குக் கொடுக்கப்பட்ட பேர்களில் ஒன்று (சக். iii. 8; vi. 12; மல. iv. 2).

---

## குருத்துவ யூபிலிவிழா

யாழ்ப்பாணம், சப்பெல்வீதியிலுள்ள 'சென் எல்மோ' இல்லமானது சென்ற 22-ந்திகதி செவ்வாய்க்கிழமை சாயந்தரம் பலவர்ண மின்சாரதீபங்களாலும், பசுந்தளிர்களாலும் அழகுறச்சிங்காரிக்கப்பெற்றுத் தேசோமயமாய் இலங்கியது. இளந்தென்றல்போல உளம்குளிரும்படியாக வீசிக்கொண்டிருந்த பசுமையானகாற்றிலே அழகிய துவசங்கள் அசைந்தாடியவண்ணம் அனைவரையும் வரவேற்பனபோல் காட்சியளித்தன. நகரின்பல்வேறுபகுதிகளிலிருந்தும் பிரமுகர்களும், பெண்மணிகளும் அலங்கிர்த ஆடைகள்அணிந்து குடும்பம் குடும்பமாகவும், தனித் தனியாகவும் வந்துசரிந்தவண்ண மிருந்தகாட்சியோ பெரும்மாட்சியாயிருந்தது.

தங்கள் குடும்பங்களுக்கு மணிச்சுடராய்த்திகழும் வண. ஜே. எவ். சேவியர்சுவாமியவர்களின் குருத்துவ செம்பொன் யூபிலிவிழாவைக் கொண்டாடி அவரைக் கௌரவிக்குமுகமாகச் சென் எல்மோஇல்லத்தின் எசமாட்டியான திருமதி எஸ். யோசெவ்அவர்களும், அவரின்சுற்றத்தவர்களும் அகமலர்ந்து முகமலர்ந்து அனைவரையும் ஆனந்தமாகவரவேற்று உபசரித்து எல்லோரும் சந்துஷ்டியாக அமர்ந்திருக்கும் போது, யூபிலிநாயகரான சுவாமிகள் குருமார்சமேதராய் அங்கண்பிரசன்னமாகவே சந்திரனைக் கண்டு பொங்கியெழுந்த சமுத்திமேபோன்று சகலரும் ஆனந்தம்பொங்கியவர்களாய் எழுந்துநின்று ஆரவாரஞ்செய்துநிற்க, திருமதி எஸ் யோசெவ்அவர்களும், திரு. எஸ். பிலிப்ஸ்அவர்களும் நறுமணங்கமழும் மலர் மாலைகள்சூட்டி அவரை நல்வரவேற்றுநின்றார்கள்.

அதன்மேல்அனைவர்க்கும் சிற்றுண்டி வகைகளும், குளிர்பானங்களும் சம்பிரமமாகவழங்கப்பெற்றன. யூபிலிநாயகர் தம்மைக் கௌரவிக்கவந்தோரையெல்லாம் தனித்தனியேசந்தித்து, புன்னகைதவழ இன்மொழிபகர்ந்து இன்புறச்செய்தார். ஈற்றில் ஆசனக்கோவில் பிரதமகுருப்பர் செவாலியர் டக்றர் சென்ஜோண் புவிராசசிங்க அவர்களும், செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்களும் யூபிலிநாயகரின் அரும் சேவைகளையும், பெருங்குணாதிசயங்களையும்பாராட்டிச் சபையோரெல்லாம் உணர்ச்சி வசப்படும்படியாகச் சிறந்த சொற்பொழிவாற்றிச் சகலர்போலும் அவருக்கு யூபிலிச்சோபனம் கூறிநின்றார்கள். அதன்மேல் யூபிலிநாயகர் தகுந்தபதில்அளித்து, நன்றிதெரிவித்துத் தமது திருக்கரஆசி வழங்கியதோடு வரவேற்புவிழா இனிதே நிறைவாயிற்று. சுபம்!

---

### முதல் வெள்ளி முதற் சனி

—*—

**நாளை (1-4-60) வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி–மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமை தோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமை தோறும் திவ்வியநன்மைவாங்கித் தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்றார்.

---

## சித்திரைமாதம்

**பொதுக்கருத்து:** குருமார் தங்கள் திருத்தொண்டுக்கடுத்த காரியங்களில் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் வரப்பிரசாதத்தை அதிகமாகப்பெற்றுப் பலமடையும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** தீய பிரசுரங்களினால் வேதபோதகநாடுகளில் விளையும் ஆபத்துகளை வெற்றியளிக்கும் முறையில் கத்தோலிக்கர் எதிர்க்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

---

● எலிசபேத்மகாராணியார் தமது இரண்டாவதுகுமாரனுக்குச் சென்ற 22-ந்திகதி அன்ட்று இளவாசரென நாமகரணம் சூட்டியிருக்கின்றார். இது மகாராணியாரின்நாயகரது தந்தையின் நாமமாகும். இரண்டாவது குமாரனின் முழுப்பெயர் அன்ட்று ஆல்பேட் கிறிஸ்ரியன்எட்வாட்என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே!**

உங்களைப்போன்ற இளைஞனொருவனிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதமொன்றை ஈண்டு தருகின்றோம். வாசித்துப் பயன் பெறுங்கள்.

வண. ஞானப்பிதாவே!

இளைஞர்பக்கம் எமக்கு மிக்க நன்மைகள் பயக்கக்கூடியதாயிருந்தும் அதில் எம்மை ஊக்கப்படுத்திவிடும் ஏதுக்களில்லாததால் அநேகர் தாமடைய வேண்டிய பெரும் நன்மைகளையடையாமல் விட்டுவிடுகிறார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றேன்.

1. முதல்முதலாய் எல்லாக் கிறீஸ்தவ குடும்பங்களிலும் "பாதுகாவலன்" இல்லை.
2. இப்பத்திரிகையுள்ள வீடுகளில் தானும், இளைஞர்கள் அதை வாசிப்பதில்லை. சினிமாப் புத்தகங்களை மிகவும் ரசிப்புடன் வாசிப்பார்கள்.
3. பெற்றாரில் அநேகர் இவ்விளைஞர்க்கு நல்வாசினைப் பழக்கத்தை ஊட்ட முயற்சிக்கிறதில்லை.
4. ஆசிரியர், கலாசாலையில் இவர்களுக்கு யாதோர் ஊக்கமும் கொடுக்க நினைப்பதில்லை ஒவ்வோர் மாணவனிடத்திலுமுள்ள திறமையை யூகித்துக் கணித்து அதற்கேற்ற விதமாய் இவர்களை "இளைஞர் பக்கத்தில்" பங்குபற்றப் பண்ணுவதில்லை. அதிலே தங்கள் மாணவரினது எழுத்துவன்மையையும், பரித்தியாகஞ் செய்வதற்குரிய வீரிய குணத்தையும், விர்த்திக்கின்ற பலமுறைகள் அடங்கியிருப்பதால் இவர்கள் இவற்றில் எங்களை உற்சாகப்படுத்தி, மற்றோர்க்குப் பிரயோசனப் படக்கூடிய கட்டுரைகளை ஏன் எழுதப்பண்ண வியலாது.
5. மாணவர்களே, பலமுறைகளில் மிகவும் சோம்பலும், முன்னேறும் குணமில்லாதவர்களுமாய்க் காணப்படுகின்றனர். இன்னும் சொற்ப பிரயாசை இவ்வயசில் அவர்கள் எடுப்பராயின், இவர்களின் பிற்காலம் எப்படி நன்மையாய்த்தான் இருக்காதோ.

இங்ஙனம்,
தங்கள் ஞானப்பிள்ளை,
வில்பிறெட் அந்தோனிப்பிள்ளை.

—*—

# திருப்பாடுகளின் ஞாயிறு

"என்னிடம் பாவம் உண்டென்று உங்களில் எவன் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்"? (அருள. 8, 46—59.)

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்து நாதருடைய சீவியமும் சாங்கோபாங்க நடத்தையும் ஒருமனிதனும் காண்பிக்கக்கூடாத அதிஉன்னத நன்முன்மாதிரிகையும் கொண்டதாய் இருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. அதன் நிமித்தமே அவர் தன் எதிரிகளை நோக்கி: "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் எவன் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" என்றார். அதாவது தம்முடைய அழகுசௌந்தரியமும் நிறைந்திருந்த மனிதசுபாவத்துடன் தேவவல்லமை யாவும் பொருந்திய தேவசுபாவம் ஐக்கியப்பட்டிருந்த படியால் ஒரு அணு நேரமும் பாவதோஷத்தின் நிழல்தானும் பட்டிருக்கமுடியாது என்பதாம். இன்னும் அவர் தினமும் தமது தேவசுபாவத்தை அருட் போதனையினாலும் பெரிய வற்றாத செல்வ ஆற்றில் நீர் பாய்வதுபோல வழங்கிய நன்மைகளினாலும் அவர்கட்குக் காண்பித்தார். அவர்களோ, யூதகுருக்களினதும், மூப்பர்களினதும் குருட்டாட்டத்திற்கு உள்ளாகி அவர்மேல் குற்றம்பிடிக்கத் தொடங்கினார்கள். இதனால் யேசுக்கிறீஸ்துநாதர் அவர்களைப்பார்த்து: "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் எவன் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்". இப்பொழுதும் யேசுக்கிறீஸ்துநாதருடைய சத்திய திருச்சபையின் மேலும் அதன் அதிகாரிகளின்மேலும் பலர் குற்றம்பிடித்துக் கொண்டிருக்கின்றனர் இதனால் இத்தபசுகாலத்தில் அவருடைய திருச்சபைக்காகவும் அதன் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவது எங்கள் விசேஷ கடமை. இன்னும் விசேஷமாய்த் திருச்சபையின் பிள்ளைகள் என்று சொல்லப்படும் நாங்கள் அதன் மகிமைக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் விசேஷ தபமுயற்சிகளைச் செய்வதே எங்கள் முக்கியகடமை.

---

பின்வரும் உறுதிப்பத்திரத்தைச் சொந்தஎழுத்தால் திருப்பியெழுதி, நிரப்பி 'இளைஞர் பக்கம்', புனித அன்னம்மாள் கோவில், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புவோரின் நாமங்கள் இதற்குரிய இடாப்பில் பதியப்பெற்று, மிகவும் விரும்பத்தக்க முறையில் பிரயோகிக்கப்படும்.

## உறுதி வாக்கு

[பெயர்] ............................................................ ஆகிய நான், உத்தமனாய்ச் சீவிக்க விரும்பிப் பண்ணும வாக்கு.

1. என்னாலியன்றளவு திருச்சபையின் போதகங்களைக் கற்றுக் கொள்ள முயலுவேன்.

2 தாராளமான மனசுடன் அவற்றை அனுசரிப்பதில் வீரிய குணம் காண்பிப்பேன்.

இடம்: ............................ ஒப்பம்: ............................
பிறந்த திகதி: ...................... ஞானஸ்நானத் திகதி: ...........
முதல்நன்மைத் திகதி: ............. உறுதிபூசுதற் திகதி: ............

---

# கணவனை இழந்த ஆறுபிள்ளைகளின் தாய்க்குச் சிறுமியின் கடிதம்

அன்னையே!

உங்கள்நிலை அநுதாபத்திற்குரியது. இரட்டைமாடு இழுக்கவேண்டியவண்டியையொண்டியாய்த்தனித்து இழுக்கவேண்டிய மாடுபோல், அன்னை தந்தை ஆகிய இருவர் பொறுப்பேற்கவேண்டிய—ஆறுபிள்ளைகளடங்கிய உங்கள் குடும்பத்தை, பத்தாவின்பிரிவால் தனித்து நின்று இயங்கச் செய்யவேண்டிய நிலைமைக்குள்ளானேனே! எனஏங்காதீர்கள்.

ஆறு சிசுக்களையல்ல, எதிர்காலத்தில் நாட்டின் முதுகெலும்பெனத் திகழவேண்டிய வச்சிரத்தூண்கள் ஆறை ஸ்திரமான முறையில் அமைக்கவேண்டிய பெரும்பொறுப்பைத்தான் இன்றிறைவன் உங்களிடம் அளித்துள்ளார்.

தந்தையின் ஸ்தானத்தையும் நான் ஏற்று என்செல்வங்கள் ஆறையும் பேணுவதெங்ஙனம்? எனத் திகைக்காதீர்கள். இன்று இந்நிலைக்கு உங்களை உள்ளாக்கியகடவுள் இந்நிலையைச் சமாளிப்பதற்கேற்ற சூழ்நிலைகளையும் விரைவில் உருவாக்குவார். "திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை" உங்கள் நம்பிக்கையைப் பரிபூரணமாகக் கடவுளில் வையுங்கள்.

உங்கள் ஈர்மூன்று செல்வங்களையும் தக்கநிலைக்குக் கொண்டுவருந்தனையும் நீக்கள் பற்பல நெருக்கிடையான சூழ்நிலைகளுக்குள்ளாகலாம், என்பதற்குச் சந்தேகமில்லை. எனினும் மனந்தளர்ந்து கோழைத்தனமான எதையும் செய்து, இன்று தந்தை அற்றவர்களாய் இருக்கும் உங்கள் பிளளைகளை அன்னையுமற்ற அனாதைகளாக்காதபடி, கவலையையும் கஸ்தியையும் கொடுக்கக்கூடிய சென்றகால நிகழ்ச்சிகளில் மனதை யீடுபடுத்தாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி உங்களுக்குப் புத்தி கூறுகிறேன்.

அலைகடலின் மத்தியிலகப்பட்டுக் கப்பல் தத்தளிக்கும் சமயம் அதைச் சமயோசிதமாகச் செலுத்திச் சென்று கரைசேர்த்தலை விட்டு, மாலுமியே மனஞ்சோர்ந்து கடலில் மூழ்கி உயிரை மாய்த்துக்கொண்டால் கப்பலில் உள்ளவர்களின் கதி என்ன? எனவே உங்களுக்காக வாழ நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்கள் கண்மணிகளின் நலனுக்காக, அவர்களின் எதிர்காலம் ஒளியுடன் விளங்கும் படியும், அவர்கள் பிறர் கையில் அகப்பட்டு இன்னலுறாமல் தடுக்கும் பொருட்டும்; முக்கியமாக, அவர்களை நேர்வழியிலிட்டுச் செல்ல வழிகாட்டி இல்லாததால் அவர்கள் தீய வழியிற்சென்று துஷ்டராகி நித்திய கேட்டுக்கு இலக்காகாதபடி அவர்களின் ஆறு ஆன்மாக்களையும் மீட்கும் பொருட்டும்; சோர்வு கொள்ளாமல் இன்று இறைவன் உங்களிடம் ஒப்படைத்துள்ள இப்பெரும் பொறுப்பை அவர் சித்தத்திற்கு அமைந்த மனதுடன் அவர் உதவியை வேண்டி ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒருகாலம் பள்ளமாய் இருந்தநிலம் எப்பொழுதும் பள்ளமாய் இருப்பதில்லை. அதுபோல் உங்கள் செல்வங்களும் இன்றுபோல் என்றுமே சிறுவராய் இருக்கப்போவதுமில்லை. இன்று நீங்கள் பாடுபட்டு அவர்களைத் தாபரிப்பதற்கு ஈடாக ஆறாண்டுகள் கழிந்தபின் அவர்கள் வளர்ந்து அறிவும் ஆற்றலுமிக்கோராய், கல்வி கேள்விகளில் தேர்ந்து விளங்குதலையும் பிறராற் போற்றப் படுவதையும் கேட்டின்றுபடுந் துன்பங்களையும் மறந்து விடுவீர்கள். உயர்ந்த பதவி வகித்துத் தாம் பெறும் ஊதியத்தைக் கொண்டு வந்து உங்கள் கரங்களில் திணித்து

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

# பரிசுத்தசுவிசேஷத்தில் களிகூர்ந்தகாரணிக்கம்

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

நம்மோடு' என்று அர்த்தமாம்" என்றார் — இசை. 7-14, 61-1. அப்போது சூசையப்பர் நித்திரையினின்று எழுந்து, ஆண்டவருடைய தூதன் தமக்குக் கட்டளையிட்டபடி செய்து தமதுமனைவியை அங்கீகரித்துக் கொண்டார். அன்றியும் அவள் தலைப்பேறான தன்குமாரனைப் பெறுமளவும் அவர்அவளை அறியாதிருந்து வந்தார்—மத். i. 18–25.

சூசையப்பர் நீதிமான் என்னும் போது வேதாகமங்களில் கூறப்பட்டபடி அவர் பெரிய புண்ணியவான் என்று விளங்கவேண்டும். அன்றியும், உலக இரட்சகரைப் பெறவேண்டியவள் கன்னிகையாயிருக்கையில் அர்ச். கன்னிமரியாய் விவாகஞ் செய்ததன் காரணம் சிந்தனைக்குரியதொன்றே. முதலாவது புருஷனின்றிப் பிள்ளையைப் பெற்று விபசாரியென்று பேரெடுக்காதபடியும், இரண்டாவது யேசுநாதர் தாவீது கோத்திரத்தில் பிறப்பாரென்று தீர்க்கதரிசனங்களிற் சொல்லப்பட்டிருந்ததினால் அர்ச். கன்னிமரியாய்க்குத் தாவீது கோத்திரத்தில் உள்ள ஒருபத்தா வேண்டியிருந்ததுமேயாகும். ஏனெனில், யூதர்களுடைய முறைமைப்படிக்கு வம்சவரிசை புருஷனுடைய வழியாக மாத்திரம் குறிப்பிடப்படும். ஆகையால், இவ்விரண்டு காரணங்களைப் பற்றியும் அந்தஆண்டவள் விவாகஞ் செய்யவேண்டியிருந்தது. ஆயினும், அவள் முப்பொழுதும் கன்னிகை என்பது சத்தியம்.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரன் அர்ச். கன்னிமரியாயின் இரத்தத்தைக்கொண்டு திருக்குழந்தையின் சரீரத்தை அவளுடைய நிர்மலமான உதரத்தில் உண்டாக்கினாரே ஒழிய அவர் திருக்குழந்தைக்குத் தகப்பனல்ல. ஆதாமின் சரீரத்தைச் சருவேசுரன் மண்ணாலேஉண்டாக்கினதினாலே ஆதாமுக்குச் சருவேசுரன் தகப்பனாகவில்லை என்பதுபோலாம்.

இனி, திருச்சபைக் கணக்கின்படி உலகசிருட்டிப்பின் 4004-ம் வருடத்தில் இரட்சகர் உன் கோத்திரத்தில் பிறப்பாரென்று பிதாப்பிதாவாகிய அபிரகாமுக்குச் சருவேசுரன் வாக்குத்தத்தம்பண்ணின 1921-ம் வருடத்தில், சலமோன் எருசலேம் தேவாலயத்தைக் கட்டிய 1005-ம் வருடத்தில், உரோமாபுரி உண்டாகி ஒக்தாவியன் அகுஸ்துஸ் உரோமாபுரி இராயனாகப் பட்டத்துக்குவந்த 42-ம் வருடத்தில் மார்கழிமாதம் 25-ந் திகதி நடுச்சாமத்தில் திவ்விய கர்த்தருடைய திருப்பிறப்புச் சம்பவித்தது. இப்பிறப்பைப்பற்றிப் பிதாப்பிதாவாகியயாக்கோபு, தீர்க்கதரிசிகளாகிய இசையாஸ், தானியேல், மிக்கேயாஸ் என்போர் முன்னறிவித்திருந்தனர். — **செல்வன்**

[தொடரும்]

---

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

*　　*　　*

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்செல்வி

## பரிசுத்த சுவிசேஷத்தில்
## களிகூர்ந்த காரணிக்கம்

[தொடர்ச்சி]

### திவ்வியயேசுவின் பிறப்பு

"நீயோ பாலகனே! உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; ஏனெனில், ஆண்டவருடைய வழிகளை ஆயத்தம் செய்யும்படியாகவும், நமது கடவுளின் இரக்க உருக்கத்தால் அவருடையசனத்தின் பாவ மன்னிப்புக்காகவும், அவர்களுக்கு இரட்சணியஅறிவைக் கொடுக்கும் படியாகவும் அவருடைய சமுகத்துக்குமுன் நடந்துபோவாய்; அந்த இரக்க உருக்கத்தால் உன்னதத்தினின்று உதயமானவர் அந்தகாரத்திலும், மரணநிழலிலும் உட்கார்ந்திருப்பவர்களுக்குஒளிவீசவும், நமது பாதங்களைச் சமாதானத்தின்பாதையில் நடத்தவும் நம்மைச் சந்தித்திருக்கிறார்" என்று சக்கரியாஸ் வாய்திறக்கப்பட்டு, நாவும் கட்டவிழ்க்கப்பட்டுச் சருவேசுரனைத் தோத்திரித்துப் பேசினார் — லூ i. 76–79. அருளப்பரோ ஞானத்தில் தேறித் தம்மை இஸ்ருயேல் சனத்துக்குக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்திரங்களிலே இருந்தார். ஏனெனில், ஏரோதரசன் குழந்தைகளைக் கொல்லத்தேடிக்கொண் டிருந்தமையால் எலிசபேத்தம்மாள் தன் குமாரனை வனாந்திரத்துக்குக் கொண்டுபோயிருக்கலாம்.

இதேநாட்களில் உலகம்முழுதும் குடிக்கணக்கு எழுதப்படும்படியாகச் செசார் அகுஸ்துஸ் இராயனிடத்திலிருந்து ஒருகட்டளைபிறந்தது—லூ. i. 1. இந்தச் செசார் உரோமாபுரி இராயன். அவருடைய நாளிலே உரோமருடைய ஆளுகை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என்னும் மூன்று கண்டங்களிலும் செலுத்தப் பட்டிருந்தது. அதனால்தான் உலகமெல்லாம் குடிக்கணக்கு எழுதும்படி கட்டளை பிறந்த தென்னப்பட்டது. சீரியதேசத்து அதிபதியாகிய சீரினுஸ் என்பவனால் இந்தமுதலாம் குடிக்கணக்குச் செய்யப் பட்டது. ஆதலால், எல்லோரும் தங்கள் பேர் எழுதிக்கொடுக்கும்பொருட்டுத் தங்கள் தங்கள் சொந்தஊருக்குப் போனார்கள். அப்படியிருக்கச் சூசையப்பர் தாவீதின் கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவராகையால் கெற்பவதியான தம்முடைய மனைவி மரியம்மாளோடு பேரெழுதிக் கொடுக்கும்படியாகக் கலிலேயாவிலுள்ள நசரேத்தை விட்டு யூதேயாவிலுள்ள தாவீதின் நகரத்துக்குப் போகவேண்டியிருந்தது — லூ. ii. 2–5.

அர்ச். கன்னிமரியம்மாள் சூசையப்பருக்குத் திருமணவாளியாயிருக்கையில் அவர்கள் கூடியிருக்கும்முன்னே அவள் இஸ்பிரீத்துசாந்துவினால் கெற்பவதியாகக் காணப்பட்டாள். ஆனால், அவளுடைய பத்தாவாகிய சூசையப்பர் நீதிமானாயிருந்ததினாலும், அவளைக் காட்டிக்கொடுக்க மனமில்லாததினாலும் இரகசியத்தில் அவளை அனுப்பிவிடக் கருத்தாயிருந்தார். இவைகளைப்பற்றி அவர் யோசித்துக்கொண்டிருக்கையில், இதோ ஆண்டவருடைய தூதன் (கபிரியேல் சம்மனசானவராயிருக்கலாம்) நித்திரையில் அவருக்குத் தோன்றிச் சொன்னதாவது: "சூசையே, தாவீதின் குமாரனே! நீர் உமதுமனைவியாகிய மரியம்மாளை அங்கீகரித்துக்கொள்ள அஞ்சவேண்டாம்; ஏனெனில், அவளிடம் உண்டான கெற்பம் இஸ்பிரீத்துசாந்துவினால் ஆயிற்று. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் நீர் அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர். ஏனெனில், அவரே தமது சனத்தை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிப்பார். இவையாவும் ஆண்டவர் தீர்க்கதரிசியால் மொழிந்தது நிறைவேறும்படியாயிற்று அவர் சொல்வதேதெனில், "ஒருகன்னி கெற்பந்தரித்து ஒரு புத்திரனைப் பெறுவாள்; அவருக்கு எம்மானுவேல் என்னும் நாமம் இடுவார்கள்; அதற்குச் 'சருவேசுரன்

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

## இதோ ஆண்டவருடைய அடிமையானவள்

L. M. பெனடிற்ரு அந்திரேஸ்பிள்ளை,
இரட்சகரின் மாதா சைனியம், ஆசிரியகலாசாலை.

ஏதேன் தோட்டத்தில் ஏவை பிழைசெய்தபோது எடுத்துரைக்கப்பட்ட தேவவாக்கு: "உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் பகையை மூட்டுவேன். அவள் உன் தலையை நசுக்குவாள்" தாவீதரசன் சந்ததியில் எதிரொலித்தது.

மேன்மைதங்கிய தாவீதரசன் கோத்திரத்தில் ஆனாள் வயிற்றில் அமல உற்பவமானாள் மரியாள். சென்மத்தின் தோஷம் இன்றிச் செகத்துதித்தாள் அவ் ஆரணங்கு. தெய்வப் புதல்வியாய்த் திகழ்ந்தாள் அத்தெய்வமாது. கன்னியை மணக்கக் கனவான்கள் பலர் கங்கணங் கட்டினர். கடவுளின் கருணையால் தெரியப்பெற்ற கற்பரசரையே துணைவராகக் கையேற்றாள் அக்கற்பலங்காரி.

விண்ணுலக விருட்சங்களாய் அவ்விருவரும் மண்மீது மாண்புமிகு சோதரராய் வாழ்க்கைநடத்தினர். வறுமையிலும் செம்மையாய்,போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தாய் இன்பவாழ்வு நடத்தினர். தெய்வசித்தமே தன் திருப்பணியாய்க்கொண்டாள் அக்கற்பகத்தரு. வேதாகம தேவ வாக்குகளே அவள் தியானம். மன்னுயிரைமீட்க மனுவுருவெடுக்கும் மகிபன் மெசியாவின் மாதாவாக — ஏழை பழியகற்றும் இரட்சகரின் தாயாராகத் தொண்டு செய்ய அவாவியது அவள் அன்புள்ளம் — ஆழ்ந்த தாழ்ச்சி உள்ளம். அதற்காகத் தேவனிடம் தினம், தினமிரந்தாள்.

ஒருநாள் தன் அறையில் இத்தியானத்தில் ஆழ்ந்திருந்தாள். பூலோகம் தோன்றுமுன்னே மேலோனின் உள்ளந்தனில் வீற்றிருந்த பூவையரைப் பூர்ப்பித்த பொன்னாளே அந்நாள் நீச உலகை நெறிப்படுத்த நிச்சயிக்கப்பட்டநாள். அண்ட சராசரங்களும் மண்டியிட்டு வணங்கும் அண்ணல் யேசு அமலமரி உதரத்தில் அன்புருவெடுத்த ஆனந்த நன்னாள்.

மரியாள்மனை பரமண்டல சோதியால் நிறைந்தது. தெய்வப் பூங்காவாகத் திகழ்ந்தது. பொன் ஒளிக் கதிர்களிடையே கபிரியேற் தூதன் காட்சியளித்தார். "பிரியதத்தத்திலுலே பூரணமானவளே வாழ்க! கத்தர் உம்முடனே ஸ்திரிகளுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே" என வாழ்த்தினார் (லூ. 28). வானவர் வாழ்த்துரை கேட்டு வனிதை பூரிப்பெய்தினாளில்லை. புளகாங்கிதம் கொண்டாள். "மரியே நீ அஞ்ச வேண்டாம்; உமது உதரத்தில் கெற்பந் தரித்து ஒரு குமாரனைப் பெறுவீர். அவருக்கு யேசுஎன்னும் நாமம் சூட்டுவீர்" எனத் திருவாய் மொழிந்தார் தூதன் (லூ 31). திடுக்குற்றாள் கன்னி. கண்ணிலும் மேலான கடவுளின்கனியான கற்பைக்காத்து வந்தகன்னி கலங்கினாள். "இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே" என விடைபகன்றாள் (லூ. 34). "உந்நதமானவருடைய வல்லமை உனக்கு நிழலிடும்" என்றார் தூதன். அச்சணமே அப்பெண்மணி அத்தியந்த தாழ்ச்சியோடு தன் சம்மதத்தை அறிக்கையிட்டாள். "இதோ ஆண்டவருடைய அடிமையானவள். உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" (லூ. 38) எனப் பகர்ந்தாள்.

மன்னுயிர்களின்மீட்பு மரியாளின் சம்மதத்திலேயே ஊசலாடியது. சம்மத வார்த்தைகளே தனயன் யேசுவைத் தரணிக்களித்தன. அப்பொழுதே தேவதாய்என்ற தேவாமிர்தப் பெயரைத் தெரிந்துகொண்டாள் மரியாள். மனுக்குலத்தின் மாதாவென்ற மகிமை பெற்றாள்.

திரிஉலகாளும்மகிபனைத் திருவயிற்றிலேந்திய தேவஅன்னை தன்னை ஆண்டவனின் அடிமையெனத் தாழ்த்தினாள். அகிலத்தின் அரசி

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

—*—

## ஊதாரியல்ல!

உத்தமன் மரியதாஸ்; ஆனால், தவறிவிட்டான். என்ன செய்வது? மனிதன் பெலவீனன். உள்ளத்திலே சமாதானத்தை இழந்த அவன் ஓயாத துன்ப அலைகளினால் அலைக்கழிக்கப்பட்டான் அமைதியை விரும்பினான். ஆனால், அவனின் பாவப்புயல் தணியவில்லை.

பளிங்குபோல் தெளிந்த நிலையில் இருந்த அவன் உள்ளம் கொந்தளிக்கும் கடலாக மாறியது. கலங்கிய கடல்போல் அவன் செயல்களும் தாறுமாறுகளாயின. ஆனால், அவன் மனச்சாட்சியின் வாய் இன்னும் மூடிவிடவில்லை. வாயை அடைப்பதா, அல்லது அதன் பேச்சைக் கேட்பதா? என்னும் பிரச்சினை மிகப் பெரிதாயிற்று. அதன் வாயை அடைக்க யாரால் முடியும்?

எங்கும் தேடினான். எதை? சமாதானத்தை! செவிவழி நுழையும் வாக்கியங்களிலும், கண்வழி நுழையும் பிம்பங்களிலும் தேடினான். அது கிடைக்கவில்லை. ஆனால், கிடைக்காமலா போய்விடும்? அமலனிடம் உண்டு. மனம் இருந்தால் எவரும் காணலாம்.

மரியதாசின் நண்பன் தார்சியஸ் வணக்கமாத ஆராதனைக்குப் போய்க் கொண்டிருந்தான். முன்போல் இவர்கள் இப்போது கூடித் திரிவதில்லை. அவன் மரியதாசைக் கண்டதும் "எங்கே போகிறீர்? என்று கேட்டான்.

"சந்தியில் உள்ள தேநீர்க் கடையில் பாட்டுக் கேட்கப் போகிறேன்; நேயர் விருப்பம் நடக்கிறது; இன்று நல்ல பாட்டுக்கள் கேட்கலாம்" என்றான். தார்சியஸ் அவனுடன் தாராளமாகப் பேசி, இன்றுமட்டும் தன்னுடன் கோவிலுக்கு வரும்படி கேட்டு அழைத்துச்சென்றான்.

வணக்கமாத வழிபாட்டிற்குச் சென்ற மரியதாஸ் செபிப்பதற்குத் தார்சியஸ் தனது செபமாலையைக் கொடுத்தான். அன்று வியாகுல காரணிக்கம் தியானிக்கப்பட்டது. பள்ளிக்கூட மாணவிகள் அன்று உரத்த சத்தமாய்ச் சொன்ன காரணிக்கங்கள் மரியதாசின் செவிவழி நுழைந்து உள்ளத்தை உறுத்தாது விடவில்லை. முதலாம் காரணிக்கத்தில் யேசுநாதர் பூங்காவனத்திற் பட்ட மரண அவஸ்தையையும், அதன் [illegible] கிரிகை [illegible] ணிப்பார்த்தான்.

இரண்டாம் காரணிக்கத்தில் யேசுபட்ட அடிகளையும், நாம்செய்த பாவத்திற்கு வரவிருக்கும் நரக ஆக்கினையையும் எண்ணிப்பார்த்தான். இவ்விதமே ஏனைய காரணிக்கங்களையும் தியானிக்க அவனுக்கே பயமாய் இருந்தது. தன் நிலையைக் கண்டு பயந்தான். ஆனால், பெமாலைமுடிந்து கிருபைதயாப மந்திரம் சொல்லப் பட்டது. அச்செபத்தின் அழகை இங்கே விபரித்துக் கூற முடியாத விதமாய் மரியதாசிற்குப் பெரும் உணர்ச்சிஅலைகளையும், ஆறுதலையும் கொடுத்தது.

தேவதாயின் அழகியபிரார்த்தனை மேலும்அவன் உள்ளத்தில் உணர்ச்சிகளை எழுப்பியது. "தேவபரம இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோசாவென்கிறபுஷ்பமே", "விடியற்காலத்தின் நட்சத்திரமே" போன்ற அடிகள் ஊனக்கண்களுக்கு மேற்பட்ட அழகை அவனுக்குக் காட்டியது. கண்ணாற் காணவேண்டிய அழகைக் காதாற் கேட்டு, மனக்கண்ணாற் கண்டான். அப்போது தெரிந்தது அவனுக்கு அழகு. ஆபாசத்தைத் தூண்டுவதல்ல, அன்பை இழுக்கும் அழகு என்பதையும் உணர்ந்தான்.

புண்பட்ட தன் இதயத்துக்கு மருந்து தேடிய அவனுக்கு அதில் ஆரோக்கியம் இருந்தது. ஆறுதலற்ற அவனுக்கு அதில் ஆறுதல் இருந்தது. பாவியாகிய அவன் அடைக்கலத்தைக் கண்டான். நெகிழ்ந்தது அவன்உள்ளம். மனச்சமாதானத்தை இழந்த பாவி "சமாதானத்தின் இராக்கினியே" என்றபோது எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று கூறமுடியாது தத்தளித்தான். தலை கவிழ்ந்தது. அப்போது பாவத்தை வெறுத்துப் பிரிந்தாற்போல் கண் ஒளியைக் கலக்கிநின்ற நீர் மெல்லக் கழன்று எங்கும் சிதறியது. என்னை மன்னியும்சுவாமி என்று முணுமுணுத்தது அவன் இதழ்கள்.

எல்லாம் உம்மிடம் இருக்க உலகெங்கும் தேடினேனே இவைகளை என்று தன்னையே நொந்துகொண்டான். ஊதாரியைப்போல் அலைந்து திரிந்த அவனை மாமரி தாயன்போடு அணைத்துக்கொண்டாள். அன்று முதல் அவன் ஊதாரியல்ல, தாய்மரி [illegible] புத்திரன்.

— சு. ம. சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ ஆண்டவருடைய அடிமையானவள்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தன்னை அடிமையெனக் கூறித் தாழ்மையின்குன்ருகத் திகழ்ந்தாள். அன்று தன்னை அடிமையெனச் செப்பினவள் இன்று சந்திரனைப் போல் ரூபவதியாய், சூரியனைப் போல் இலங்குபவளாய், படையணியைப்போல் பயங்கரம் உறுத்துகிறவளாய், அருணேதயம் போல் ஆண்டவன் சந்நிதியில் வீற்றிருக்கிருள். பூவுலக அரசியாய் முடிசூடி முடிவில்லா ஆட்சி செலுத்துகிருள். சென்னியில் பன்னிருதாரகைகள் சூடி, பத்திராசனரால் நித்தியம் துதிக்கப்படுகிருள். திக்கற்றவர்க்குத் தஞ்சமாய், சஞ்சலமுற்ருேர்க்குச் சஞ்சீவியாய், பாவிகளுக்கு அடைக்கலமாய், பரதேசிகளின் பரோபகாரியாய், பட்சம்காட்டிப் பரிந்துபேசும் பகவதியாய்ப் பர்ணமிக்கிருள்.

பாவலர் பாவிலும், நாவலர் நாவிலும் அவள்நாமம் வாழ்த்தப்படுகிறது. உலகின் எத்திசையிலும் நாள்தோறும் அவள் நாமம் நயக்கப்படுகிறது. எம் தாய்மரியின் தன்னிகரற்ற நிலைமைக்குக் காரணம் அவள் தன்னைத் தாழ்த்தியுரைத்த "இதோ ஆண்டவருடைய அடிமையானவள்" எனும் பொன்னுரைகளன்ருே!

வாழ்க எம்தாய்!
வளம்பெறுக அவர் ஆட்சி!

## கணவனை இழந்த...

[இளைஞர்பக்கத் தொடர்ச்சி]

அஞ்சலி செய்தலைக் கண்டிறும்பூதெய்துவீர்கள்

இன்று நீங்கள் அனுபவிக்கும் சோகத்தை இருந்தஇடம் தெரியாது விரட்டி ஓட்டும்சக்தி உங்கள் செல்வங்களுக்கு உண்டு என்பதைச் சிந்தையிலிருத்தி இனி 'அன்னையும் தந்தையும் அவர்களுக்கு நான்தான்' எனப் பெருமிதத்துடன் கூறி உங்கள் பெரும்பொறுப்பை யுணர்ந்து தாய்க்குரிய தன்னலமற்ற தியாக சிந்தையுடனும் தந்தைக்குரிய தளரா முயற்சியுடனும் தொண்டாற்றத் தொடங்குங்கள்.

பொறுப்புணர்ந்து பணிபுரியுந்திறனையும், தியாகசிந்தையையும், திடசித்தத்தையும், இறைவன் உங்களுக்கு அளிப்பாராக.

இங்ஙனம்,
தங்கள்மேல் அனுதாபமுள்ள சிறுமி,
**மேரி ரோசலீன் சூசைப்பிள்ளை.**

## நன்றித் துதி

அன்பும், அருளும்நிறைந்த அமல உற்பவ அன்னையே! துன்பப்படுவோரைத் தேற்றுகின்ற சதாசகாயத்தாயே! உமது அருளை அபிரிமிதமாய் அடைந்துகொண்ட ஏழைத்தாசனுகிய அடியேனின் நன்றியும், வாழ்த்தும் உரியதாக.

இரக்கத்தின் அம்மா! என் இதயம் உமது அருளால் நிறையப்பெற்ற உணர்ச்சியுடன் இதை வரைகிறேன்.

இதைப் பார்வையிடும் அன்பர்களே! அடியேனின் இன்னல்களைத்தீர்த்த அம்மணியின் கருணையைப் பாருங்கள். அநீதி நிறைந்த அகிலத்திலே, அக்கிரமங்கள் மிகுந்த உலகத்திலே பாதகங்கள் பரந்த பாரினிலே, அரவின் வாயிலே அகப்பட்ட தேரைபோல அல்லற்பட்டேன். அன்பர்கள் என்று உரிமைபாராட்டியவர்களே எனது துன்பத்திற்குக்காரணம். இவர்களுடைய பழிவாங்கும் எண்ணத்தினுலே பலராலும் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஈற்றில் எனது கடமைக்குரிய உரிமையை முதலாய் இழந்தேன். என்ன செய்வதென்று அறியாது திகைத்து நின்றேன்.

அன்புத்தாயின் பாதமே தஞ்சம் என்று அஞ்சலிசெய்தேன். தவத்தோடு கூடிய செபத்தின்மூலமாக இரந்து வேண்டினேன். என்ன ஆச்சரியம். பரிதிமுன்பனிபோல் மறைந்தொழிந்தது என்துன்பம். முன்போலவே, எனது கடமையைச்செய்ய முயற்சியும், உற்சாகமும் தந்த அன்பின் அன்னையை வாழ்த்திப்போற்ற என்அங்கமெல்லாம் வாயாக இருக்குமாளுல் எத்தனையோ முறை போற்றியிருப்பேன். எனினும், எனது ஆவலை நன்றிக் காணிக்கை ... [illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2819**

***யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்***

காரைநகர்மேற்கு காரைநகர்
1. கந்தையா தம்பிப்பிள்ளையும்,
2. பெண் சௌந்தரமும்

— வழக்காளிகள்.

எதிராக

கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்
1. தம்பு செல்லப்பாவும்,
2. வயித்தி இராமுவும்,
3. பெண் நாகம்மாவும்,
4. சடையர் வீரசிங்கமும்,
5. பெண் தங்கமுத்துவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2819-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளையும் 1960-ம்ஆண்டு சித்திரை மாதம் 30-ந்திகதி (30-4-60) சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,354 சதம் 15-உம், இன்னும் ரூபா 2,000-த்திற்குப் 12-5-59 தொடக்கம் 25-11-59 வரையும் 100-க்குப் 15வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய்க் கோயிற்பற்று, ஆனைக்கோட்டையிறை "சாமிசாட்டி" ப. நி. இ. 5 செய்பயிர் வான்பயிர்களும், வடக்கெல்லைக் காணியில் கிணற்றில் பங்கும், கிழக்கெல்லைக் காணியின் ஓரமாக வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு—ஒழுங்கை. வடக்கு — சின்னப்பு வயிரமுத்துவின் ஆதனம். மேற்கு — சின்னப்பு செல்லமுத்துவின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இதடங்கலில் கிழக்குப்பக்கமாக ப. நி. இ. $2\frac{1}{2}$.

2. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, கொக்குவில் மேற்கிறை "கள்ளியும், களைக்கொக்கனும்" ப. நி. இ. 3-ம், வீடும், பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு—கந்தர் சடையரின் ஆதனம். வடக்கு — ஆறுமுகத்தான் அரியகுட்டியின் ஆதனம். மேற்கு—கந்தன் சுப்பனின் ஆதனம். தெற்கு—சடையர் வீரசிங்கம் கைம்பெண் தங்கமுத்துவின் மீதக் காணி. இதடங்கலில் வடக்குப்பக்கமாக ப. நி. இ. $1\frac{1}{2}$யும், தெற்கெல்லைக்குப் போகும் வழிப்பாதை பிறநீங்கலாக.

3. ஷெ கொக்குவில் மேற்கிறை "கள்ளிக் கொக்கனும், களைக்கொக்கனும்" ப. நி. இ. 3-ம், வீடும், பயிர்வகைகளும், மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும். மேற்குக் காணியில் கிணற்றுப்பங்கும், அதற்குச் சேர்ந்த வழிவாய்க்காலுரித்துகளும். எல்லை: கிழக்கு — கந்தர் சடையரின் ஆதனம். வடக்கு — வயித்தி இராமு பெண் கனகம்மாவின் ஆதனம். மேற்கு —கந்தன் சுப்பனின் ஆதனம். தெற்கு— சிவசம்பு மயில்வாகனத்தினுதனம். வழிப்பாதை உரித்து உட்பட இதடங்கலில் தெற்குப்பக்கமாக ப. நி. இ. $1\frac{1}{2}$.

**தா. செல்லையா,**
கோமிஷனரும், விலமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ரோசாப்பூவானது தனது நிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது. மனிதனே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

### பாடசாலை
## விளையாட்டுப் போட்டி

நாமெல்லாம் ஆவலுடன்எதிர்பார்த்திருந்த நன்னுள் பொன்னுளாகப் புலர்ந்தது. அன்று 12-3-60 சனிவாரம் டெகியோவிற்ற கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை மாணவரெல்லாம் அழகிய வெண்ணுடையும், இல்லவிருதும் அணிந்தவராய்க் கூட்டங்கூட்டமாக மாகம்மனை விளையாட்டுமைதானத்தை நோக்கிச் சரிந்துகொண்டிருந்தார்கள்.

அழைப்பிதழ் பெற்ற பிரமுகர்கள் ஆரம்பவேளைக்கு முன்னதாகவே மைதானத்தையடைந்து மாணவர்களை மகிழ்வித்தார்கள், அட்டுலுக-பனுவல கோறளைப்பகுதிக் காரியாதிகாரி திரு. பி. ஆர். தசநாயக்க அவர்கள் போட்டியை ஆரம்பித்துவைத்தார். மூன்று இல்லங்களையும்சேர்ந்த மாணவர்கள் முடிவுபரியந்தம் சோர்வின்றிப் போட்டியில் ஈடுபட்டார்கள். இடைவேளையின்போது மாணவர்களால்நடத்தப்பட்ட அணிவகுப்புமரியாதையைப் போட்டிநிலைய அதிபர்ஏற்று ஆர்ப்பரித்தார்.

இப்பாடசாலையில் முதன்முறையாகச் சிறப்பாகநடந்த இப்போட்டியில் "யன்னக்கோனு"இல்லம் முதன்மை பெற்று அவையோரை ஆனந்தபரவசத்தில் ஆழ்த்தியது. வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் திருமதி தசநாயக்க பரிசில்களை வழங்கினுர்.

போட்டி இத்துணைசிறப்புற ஏற்பாடு செய்து, உற்சாகமும், உதவியும்அளித்த திரு. சி. டபிள்யு. முணவீர அவர்கட்கும், அவர்பாரியாருக்கும் நாம் கடப்பாடுடையோம். பரிசில்பொருட்களும், பணஉதவியும்வழங்கிய பெரியார்களுக்கும் நன்றிதெரிவிக்கின்ருேம்.

இதனை முன்னின்றுநடத்திய வண. சலெமென்ற் வெக்கியோனி சவாமியவர்கட்கும், பாடசாலைத் தலைமையாசிரியர் ஏ. செபமாலையவர்கட்கும், சிறந்தமுறையில் பயிற்சியளித்த விளையாட்டுப்பயிற்சி ஆசிரியர் க. யேசுதாசன் அவர்கட்கும், வேண்டுகோளுக்கிணங்கி நடுவர்களாய்நின்று சேவை புரிந்த பிரமுகர்களுக்கும், சமூகந்தந்து விழாவைச்சிறப்பித்த பெரியோருக்கும் உளம்கனிந்த நன்றிகூறுகிறோம்.

ஒருமாணவன்

## திருநாள் வைபவம்

பங்குனி19-ந்திகதி நாமெல்லோரும் பேருவகைகொண்ட ஒருபெருநாளாகும். எப்போதுவருமென்று சிறுவர்கள் ஆவலோடுகாத்திருந்த இப்பொன்னுளும் அண்மியது. 18-ந் திகதி மாலை மிருசுவில் அர்ச். நீக்கிலார்ஆலயம் அழகுற அலங்கரிக்கப்பட்டு மாலையாராதனை பாடப்பட்டது. அர்ச். சூசையப்பரின்பீடம் வெண்ணிறமலர்கள்கொண்டு சிங்காரிக்கப்பட்டு மெழுகுவர்த்திகளின் பிரகாசத்தில் மிளிர்ந்துகொண்டிருந்தது.

திருநாளன்றுகாலை 6-15மணிக்குப் பாடற்பூசை நிறைவேறியதும் தேவநற்கருனை ஆசீர்வாதம் அருளப்பட்டது. மரியாயின்சேனைத்தலைவர், சகோதரர், சகோதரிகள், உதவிஅங்கத்தினர்கள், மற்றும்யாபேரும் குருமனையை அடைந்து எமதுபங்குக்குரவர் வண. எல். யோசெவ்சுவாமியவர்களுக்கு மலர்மாலைகள்சூட்டித் திருநாட்சோபனம் கூறியதோடு விழா ஆரம்பமானது. முதலாவதாகப் பக்கவாத்தியங்கள் இசைக்கச் சிறுபிள்ளைகள் வரவேற்புக் கீதம் படித்தார்கள். மரியாயின்சேனைச் சகோதரிஒருவர் விழாநாயகரின் அயரா உழைப்பையும், அரும்பெரும்சேவையையும்பாராட்டிச் சொற்பொழிவாற்றினுர். அதன்பின் சகோதரர்களால் ஞானப்பூச்செண்டும், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. நன்றிக்கீதம் பாடி முடிந்ததும் விழாநாயகர்எழுந்து, அர்ச். சூசையப்பர்திருநாளிலே பொதுத்தேர்தலும் வந்திருப்பதால் அத்தேர்தல் நன்மையாக நடைபெறும்படியாக அன்றையதினம் அவரைமன்ருடும்படி கேட்டுக்கொண்டார். சிறுபிள்ளைகளின் ஆன்மவளர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும், கடவுட்பக்தியையும் தாம் விரும்புவதாகக்கூறி யாபேருக்கும்நன்றிதெரிவித்தார். சேனைச் சகோதரி ஒருவரால் யாபேருக்கும் நன்றியுரைகூறியதும் அன்புடன் ஆசியீந்தார். சிற்றுண்டி உபசரணையுடனும், கரகோஷ ஆர்ப்பரிப்புடனும் விழா நிறைவாயிற்று.

கண்டுகளித்தவர்

## கோட்டு விற்பனவ் விளம்பரம்

**இல. M. B. 2558**

***யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்***

யாழ்ப்பாணம், வண்ணூர்பண்ணை மேற்கு
பொன்னையா கந்தையா

— வழக்காளி.

எதிராச, யாழ்ப்பாணம் பெரியகடை
சின்னத்தம்பி தங்கராசா

எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 2558-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணியை 1960ஆடு வைகாசிமீ 14-ந்உ (14-5-60) சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,365-உம் இன்னும் ரூபா 1,000-த்திற்குப் 17-11-58 தொடக்கம் 28-5-59வரையும் 100-க்குப் 12%வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 202ரூபா 76சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணூர்பண்ணை கோயிற்பற்று, வண்ணூர்பண்ணை தென்மேற்கிறை பர. நெ. இலா. 1 குளி5, 13/14-உம், கல்வீடும், குசினியும், மலகூடமும், கிணறும், பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு — முகமட் இப்ராகிம் பெண் முகமது சுல்தான் பீபீக்குரிய செல்லையா சதாசிவத்தின் உரிமைக்காரரின் ஆதனங்கள். வடக்கு — சுப்பிரமணியசெட்டி ஜெகநாதன்செட்டியின் ஆதனம். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — மருதையினுர் கணபதிப்பிள்ளை பெண் பாக்கியத்திற்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். முற்பதிவு D 226/103.

**தா. செல்லையா,**
கொம்மிஷனரும், விலமதிப்பாளரும்.
நம். 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி.

## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தினுலும், அர்ச். அந்தோனியாரின் மன்ருட்டினுலும் நான் இரந்து கேட்டபடி சுகம் கிடைத்தது. இன்னும், பூரண சுகம்பெற இவர்களை இரந்து மன்ருடி, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

பேசாலை, இ. தெரேசம்மாள் லம்பேட்.

பாகிஸ்தானின் புதியபிரதமநீதியரசராகத் திரு. அல்வின் றெபேட் கொர்னீலியஸ்அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவர் ஒரு கத்தோலிக்கர். பாகிஸ்தானில் கிறீஸ்தவர்ஒருவர் நீதியரசராக நியமனஞ் செய்யப் பெற்றிருப்பது இதுவேமுதன் முறையாகும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 31-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org